12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 7—5—1978 | இதழ் 34

காட்டூராரும் - கண்டியூராரும்!

கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

அண்மையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், கண்டியூரார் திரைப்படங்களில் நடிப்பதுபற்றி காட்டூரார் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். உடனே கண்டியூராருக்கு ஆத்திரம் பொங்கி விட்டது. காட்டூராரைக் கண்டபடி சாடினார்-கனல் கக்கப் பேசினார். ''காட்டூர்'' என்பதே கேலிக்குரிய ஒரு சொல் எனும் விதத்தில் தமது சொல்லாற்றலைக் காட்டினார் கண்டியூரார்! காட்டூரார் அதற்காக வருந்தவில்லை — மகிழ்ச்சியே அடைந்தார், காரணம்; காட்டூர் தமிழ் நாட்டிலே- தாயகத்திலே இருக்கும் ஊர்! தன்னைக் கேலி செய்பவரோ, இலங்கையில் கண்டியில் பிறந்து இந்தத் தமிழகத்தை இன்றைக்கு ஆளும் பொறுப்பை ஏற்றிருப்பவர் - தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் ஏமாளித் தனத்தின் காரணமாக அரியாசனம் ஏறிக் கொண்டவர்; அவர், காட்டூராரைக் கேலி பேசுகிற அளவுக்கு ஒருநிலை!

காட்டூரார், தொழிலாளர்கள் மத்தியில் உழைப்பவர்களில் ஒருவர், எனவே அவர், தொழிலாளர்கள் விழாவில் பேசும்போது ''அதிக ஊதியம் கேட்கும் தொழிலாளியைப் பார்த்து, 'ஏ, தொழிலாளியே உன்னை விடக் குறைவாகச் சம்பாதிக்கும் மக்களைப் பார்!'' என்று உபதேசம் செய்கிற கண்டியூரார்; தனக்கு மட்டும் மாதம் ஆயிர ரூபாய் சம்பளமும் ஏனைய அரசாங்க வசதிகளும் போதவில்லை யென்று மேலும் வருமானத்திற்கு வழிதேடத் திரைப்படத் தொழிலுக்கு நடிப்பதற்குப் போகிறேன் என்கிறாரே; இதுமட்டும் என்ன நியாயம்?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாத கண்டியூரார்; கேள்வி கேட்டவரைப் பார்த்து ''அவர் காட்டூரார்'' என்று கிண்டல் செய்து, தன் ஆத்திரத்தைத்தணித்துக் கொண்டார்.

"நான் முதல்வர் பதவிக்கு வந்தால் நஷ்டம் எனக்குத்தான்! என்றாலும் என்னுடைய வருமான நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு பதவிக்கு வர விரும்புவது மக்களுக்குத் தொண்டு செய்யத்தான்- தியாகம் செய்யத்தான்!''

என்று கண்டியூரார் தேர்தல் நேரத்தில் பேசி, அவரது கட்சிப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்திருக்கிறது. இது திருப்பூர் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியது ஏடுகளில் வந்ததோ 26—5—77ல்!

"தொழில் செய்பவர்கள் ஆட்சிக்குச் செல்லக் கூடாது! தியாகம் செய்பவர்கள்தான் ஆட்சிக்குச் செல்ல வேண்டும்."

இது உளுந்தூர்ப் பேட்டைத் தேர்தல் கூட்டத்திலே கண்டியூராரால் கண்டிப்பாகப் பேசப்பட்டு தடித்த எழுத்துக்களில் அவரது கட்சி ஏட்டில் 4—6—77 ல் வெளிவந்திருக்கிறது.

இப்படி நடிப்புத் தொழிலையும் அதனால் கிடைக்கும் பல லட்ச ரூபாய் வருமானத்தையும் (கறுப்பாக முக்கால் பகுதியும் வெள்ளையாகக் கால் பகுதியும்) விட்டுவிட்டு, முதல்வர் பதவிக்கு வந்துள்ளதை பெரிய தியாகம் என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த கண்டியூரார்; தன்னிடமுள்ள கவர்ச்சி போய்விட்டால் கட்சி போய் விடும் என்று அவரது கட்சிக்காரர்களின் அந்தரங்கக் கூட்டத்தில் தெரிவித்துவிட்டு; திடீரெனத் திரையுலகிற்குத் திரும்பி வந்து நடிக்கப் போவதாகவும்-அதே சமயம் பகுதி நேர முதல்வராகப் பதவி வகிக்கப் போவதாகவும் அறிவித்து விட்டார்.

"பணம் வாங்காமல் நடிக்கப் போகிறேன்"

இது கண்டியூராரின் முதல் அறிவிப்பு!

சிலவாரங்கள் ஓடுகின்றன. சினிமாவில் நடிப்பதற்கு மற்றொரு புதிய காரணத்தை வழங்குகிறார்.

"ஏற்கனவே ஒத்துக் கொண்டு நடித்த பழைய படங்கள் பாக்கியிருக்கின்றன. அவைகளை முடித்துக் கொடுக்கப் போகிறேன்"

கண்டியூராரின் அடுத்த அறிவிப்பு இது,

மேலும் சில நாட்கள் ஓடுகின்றன.

புதிய படத்திற்கான தொடக்கவிழாவில்கலந்து கொண்டு அந்தப் புதிய படத்தில் நடிக்கப் போவதாக அறிவிக்கிறார் அதே கண்டியூரார்!

அதன் பிறகு இப்போது ஒரு புத்தம் புதிய காரணத்தை வெளியிட்டுள்ளார்.

"கருணாநிதி எழுதுகிற உரையாடல்களுக்கு, நான் படங்களில் நடித்துத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது"

இது கண்டியூரார் வெளியிட்டுள்ள புதியகாரணம்- உடன் பிறப்பே! நான் நாலு நாட்கள் உட்கார்ந்து எழுதுகிற உரையாடல்களுக்குப் பதில் சொல்ல; பாவம் — கண்டியூரார் நாலு மாதமோ ஆறு மாதமோ கஷ்டப்பட்டு நடிக்கப் போகிறார்.

இப்படி முரண்பாடுகளின் மொத்த உருவமாகக் காட்சி தருகிற கண்டியூரார் தான் காட்டூராரைப் பார்த்து ஏளனம் புரிகிறார்; ஏகடியம் செய்கிறார்!

காட்டூரார் என்று கண்டியூராரால் இழித்துரைக்கப்பட்டாலும் அந்தக் காட்டூராரிடம் காணப்படும் தெளிவு-இந்தக் கண்டியூராரிடம் ஒரு துளியும் இல்லையே!

இந்த அழகில், கண்டியூர் காட்டூரைப் பழிப்பதா?

வேடிக்கை காட்டும் விதூஷகர் ஒருவரை நாடாளும் முதல்வராகப் பெற்றால்; இப்படிப் பல குழப்பமான நிகழ்ச்சிகளை கண்டு களிக்கத்தான் வேண்டும்.

அன்புள்ள

மு.க.

சிந்தனைக்குச் சில செய்திகள்!

மொழிப் போரில் ஜார்ஜியா மக்கள்!

பாட்டாளி மக்களின் பாசறை; தொழிலாளி கண்ட அரசு சோவியத் யூனியன்; ஆகும். பதினைந்து குடியரசுகளின் கூட்டாட்சியே அது. சோசலிச இலட்சியத்தின் முன்னோடியாக சோவியத் திகழ்ந்து வருகிறது.

ஒவ்வொரு குடியரசும் தனக்கென்று தனிக் கொடியோடு கோலோச்சி வருகின்றன. அவற்றிற்கென்று தேசிய கீதத்தை உருவாக்கி கொண்டுள்ளன. தங்களுடைய தாய் மொழியையே ஆட்சி மொழியாக ஆக்கிக்கொண்டுள்ளன.

பொதுவுடைமைப் பூங்காவான சோவியத் கூட்டாட்சிக் குடியரசுகளில் மொழிப் பிரச்சினை முளைத்துள்ளது.

அடிப்படைத் தேவைகளான உண்ண உணவும், உடுத்த உடையும் இருக்க இடமும் இருந்தால் மட்டும் போதும் என்ற நிலையில்லை. மனித வர்க்கத்தின் மற்ற வேட்கைகளும் நியாயபூர்வமாக நிலவிடத்தான் செய்கின்றன.

தேனினும் இனிய தன் தாய் மொழியும், தங்களுக்கே உரிய தனித்த பண்பாடும் கட்டிக் காப்பாற்றப்பட வேண்டும் என்று எண்ணுவதும் இயல்பே.

"உயிரினுமினிய தாய் மொழிக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு" என்று உரிமைச் முழங்க எடுத்து ஆரம்பித்து விட்டனர் ஜார்ஜியா அர்மீனியா ஆகிய மக்கள் அந்த உரிமைச் சங்கின் உரத்த ஒலி உயர்ந்த இடத்தில் உள்ள கிரெம்ளின் மாளிகையை எட்டியுள்ளது.எதிரொலித்தும் கேட்கின்றது. மாஸ்கோவிலுள்ள மைய அரசுக்கு இது மயக்கத்தையும், கலக்கத்தையும் உண்டாக்கியுள்ளது.

முடியாட்சிக்கு முடிவுரை எழுதி குடியாட்சிக்கு கால்கோள் விழா எடுத்தார், மாவீரன் லெனின்! அடிமை வாழ்விலிருந்து மக்களை விடுவித்து உரிமை வாழ்வுக்கு அவர்களை கொண்டு வந்து சேர்த்த மகத்தான தலைவர் லெனின்.

அவரது மறைவுக்குப் பின் வரலாறு புதிய தலைமையைப் படைத்துக் கொண்டது.

தலைமை என்பது குடிசையிலேயிருந்தும் தளிர்விடும். நடைபாதை ஓரத்திலிருந்தும் நாட்டை ஆளவரும். எம் மொழி பேசுகின்ற தலைமை எனினும் நாட்டோர் ஏற்றுக் கொள்வர்- எம் மண்ணுக்கு உரியவராகயிருந்தாலும் எஃகு போன்ற நெஞ்சம் படைத்த தலைவன் என்றேனும் ஓர் நாள் நாட்டை ஆளத்தான் செய்வான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஜோசப் ஸ்டாலின் கால் நூற்றுண்டுக்கும் மேலாக சோவியத் கூட்டாட்சியை சோர்வின்றி ஆட்சி செலுத்தினன். உலக நாடுகளின் முன் வரிசையில் சோவியத் நாட்டை உன்னதமான இடத்தில் இருக்க வைத்தான். அந்த மாமனிதன் பிறந்தமண் தான் ஜார்ஜியா குடியரசு ஆகும்.

மாவீரன் ஸ்டாலினின் துணைவராக இரசியக் காவல் படையின் தலைவராக விளங்கியவர் லாவ்ரெண்டி பெரியா. அவர் பிறந்த மண்ணும் ஜார்ஜியாவேயாகும்.

சோவியத் ரஷ்யாவின் குடியரசுகளில் ஒன்றாக விளக்கும் ஜார்ஜியாவில் பலதேசிய இன மக்கள் வாழ்கின்றார்கள். ஜார்ஜியாவில் பல தேசிய இன மக்கள் வாழ்கின்றார்கள். ஆட்சி மொழியாக நாட்டை அலங்கரித்து வருகிறது. ஆட்சி பீடத்திலிருந்து ஜார்ஜியன் மொழியை அடியோடு அகற்றிடவும் ரஷ்ய மொழியையே ஆட்சி மொழியாக ஆக்கவும் சோவியத்தலைவர்கள் ஒரு சோதனையில்இறங்கினர். மொழி உணர்வில் முன்னோடியாக விளங்கிவரும் ஜார்ஜியாவினர் கடுமையாகத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தனர். எதிர்ப்புக் குரல் ஏகோபித்துக் கொடுத்தனர். அதன் விளைவாக மத்திய ஆட்சியிலே இருந்தவர்கள்மருண்டு போயினர். மக்களின் எதிர்ப்பு அலைஅளில் மத்திய ஆட்சி எங்கு தரை தட்டிய கப்பலைப் போல் ஆகிவிடுமோ என அஞ்சினர். ஜார்ஜிய மொழியை ஆட்சியிலிருந்து அறவே நீக்கி ரஷ்ய மொழியைப் புகுத்திடும் புதிய திட்டத்தை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது ஆம்! பின்வாங்கி விட்டது!

இந்த நிலை ஏற்பட்ட பின்னர்தான் அண்மையில் ஜார்ஜிய குடியரசுக்கென உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்தில் ஜார்ஜிய மொழியையே ஆட்சி மொழியாகச் சேர்த்து விட்டார்கள்.

சோவியத் தலைவர்கள், தாங்கள் செயலாக்க எண்ணிய ஒரு திட்டத்தை மக்களின் பயங்கர எதிர்ப்பைக் கண்டு மருண்டது மட்டுமின்றி திரும்பப் பெற்றது சோவியத் வரலாறு காணாத நிகழ்ச்சியாகும்.

சோவியத் கூட்டாட்சியிலுள்ள அர்மீனியா குடியரசிலும் இது போன்றே ஆட்சி மொழிப் பிரச்சினை உருவானது. அர்மீனியாவின் புதிய அரசமைப்பில் ஆட்சி மொழியாக அர்மீனிய மொழி சேர்க்கப்படவில்லை.

ஜார்ஜியர்களுக்குத் தாங்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மெய்ப்பிக்க இக்குடியரசு எங்கும் கடும் கொந்தளிப்பு எழுந்தது. எதிர்ப்புக் கணைகள் இயல்பாக்க் கிளம்பின.

எரிமலையென எங்கே இம் மொழி பிரச்சினை வெடித்து விடுமோ என அஞ்சியது மத்திய அரசு. எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றக் கூடாது என அறிந்த பிரத்யட்சநிலையைஉணர்ந்தமத்திய ஆட்சி பின்வாங்கிவிட்டது. அர்மீனிய குடியரசின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அர்மீனியா மொழியே ஆட்சி மொழியாக தொடர்ந்து நீடிக்கும் என்று உருவாக்கியது.

காக்கசஸ் மலைச் சாரலில் உள்ள ஜார்ஜியா, அர்மீனியா ஆகிய குடியரசுகளின் மக்கள்

தங்களுடைய தாய் மொழி மீதும், தங்களுடைய பண்பாட்டின்மீதும் தணியாத பற்றும் பெருமையும் கொண்டு ரஷ்ய மொழிக்கு எழுத்து வடிவம் உருவாகாத நேரத்திலேயே ஜார்ஜியனும், அர்மீனியனும் மொழியிலும் பண்பாட்டிலும் மிகவும் வளர்ச்சியடைந்துத் திகழ்ந்தன என்று வரலாறு கூறுகிறது.

தங்கள் அன்னை மொழிக்கு ஆபத்து வந்த நேரத்தில் எல்லாம் ஜார்ஜிய மக்கள் தங்கள் மொழியைக் காத்துக் கொண்டார்கள். ஆதிக்க மொழிகள் பலவற்றின் தாக்குதல்களினுல் தங்கள் மொழி அழிந்து போய் விடாமல் இருக்க பல நூற்றாண்டுகளாக கடுமையாகப் போரிட்டு வந்திருக்கிறார்கள்.

"தேசிய தனித் தன்மையின் அன்புச் சின்னமாகத் திகழ்ந்து வரும் தங்கள் தாய் மொழியை எத்தனையோ விபத்துக்களுக்கிடையும் பொன்னே போல் போற்றி உயிருக்குயிராகப் பாதுகாத்து வருகின்றார்கள்'; என்று ஜார்ஜிய மொழி அறிஞரான ஜிட்ஜி குரி கூறுகிறார்.

ஜார்ஜியக் குடியரசின் தலைநகரான டிபிசிலியிலுள்ள பல்கலைக் கழகம், 1969ம் ஆண்டில் இவர் எழுதிய ஜார்ஜியன் மொழி" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

ஜார்ஜிய மொழியை ஒழித்துக் கட்டுவதற்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்பவர்களே டிபிலிசி பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் இவர்கள் சில வாரங்களாக நகர வீதிகளில் அடிக்கடி எதிர்ப்பு ஊர்வலம் நடத்துகிறார்கள்.

ஒரு முறை இம்மாணவர்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டு அரசுத் தலைமைச் செயலகத்தின் முன்பு கூடித் தங்கள் தாய்மொழிக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். அந்த வீர முழக்கத்தின் ஒலியைக் கேட்டு ஜார்ஜிய பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் எட்வர்டு ஷேவார்ட்னட்ஜ் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார்,

மாணவர்களை நோக்கி, "என் குழந்தைகளே! என் குழந்தைகளே! என்ன . . என்று உரத்த குரலில் கேட்டார்.

"நாங்கள் உமது குழந்தைகள் இல்லை' என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் உரத்தக் குரலிலேயே பதில் கூறினர். அது மட்டுமின்றி அவரிடம் இக்கட்டான அரசியல் கேள்விக் கணைகளைச் சரமாரியாக தொடுக்கவே அவர் பதில் சொல்ல முடியாமல் அங்கிருந்து ஓடிவிட்டார்.

ஷேவார்ட்னட்ஜீ ஜார்ஜிய குடியரசில் உள்துறை அமைச்சராக இருந்தவர். இவரைக் கட்சித் தலைவராக 1972 இல் கிரெம்ளின் நியமித்தது. இவர் தீவிரக்க மற்ற சக்தி வாய்ந்த தலைவர் என்று எண்ணி தலைமை செயல்பட்டு வந்தது.

ஜார்ஜியக் குடியரசில் ரஷ்ய மொழியைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டவர் என்ற முறையில் இவர் மாஸ்கோ தலைவர்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமாயிருந்தார்.

இவர் ஜார்ஜியாப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்வரை ஜார்ஜியாவில்ரஷ்ய மொழியைத் திணிக்கும் முயற்சி மறைமுகமாகவே நடைபெற்று வந்தது. இவர் தலைமைக்கு வந்த பின்னர் ரஷ்ய மொழியைப் புகுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்தன. மக்களின் எதிர்ப்பு மலைபோல் குவிந்தன அதனுல் புகுத்திடும் முயற்சி பனிபோல மறைந்தது

சோவியத் கூட்டாட்சியின் மக்களில் எழுபது சதவிகிதத்தினர் ரஷ்ய மொழியைத் தாய் மொழியாகவோ அல்லது இரண்டாவது மொழியாகவோ கற்றே பேசுந் திறமை பெற்றே இருக்கிறார்கள்.

ஆனல் ஜார்ஜிய குடியரசு மக்களில் இருபது சதவிகிதத்தினர் மட்டுமே ரஷ்ய மொழியை ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறார்கள். 1970-ம ஆண்டு மக்கள் தொகைகணக்கெடுப்பின்போது கண்டறிந்தான உண்மையாகும் இது.

கருங்கடலுக்கும் காக்கசாஸ் மலைக்குமிடையில் பல நூற்றண்டுகளாக வாழ்ந்து வரும் ஜார்ஜியா அர்மீனியா மக்களை இன்று தாய் மொழியும், தனிப் பண்பாடும் கிளர்ந்தெழச் செய்துள்ளன,

இன்று தணிந்திருப்பது போல் தோன்றும் இந்த நீறு பூத்த நெருப்பு மொழி ஆதிக்கம் என்னும் சிறு காற்று வீசிடினும் எந்த நேரத்திலும் பெருந்தீயாய் மூண்டிடக் கூடும்.

மொழி ஆதிக்கத்தை எங்கு செலுத்த முயன்றாலும் தோல்வியைத்தான் அது அணைக்க நேரும்தமிழகம் படைத்த இவ்வரலாற்றை தரணி இதற்குள் மறந்துவிடுமா ?

ஜார்ஜியா என்ன இதற்கு விதிவிலக்கா?

'அக்னி பகவானுக்கு' பலியான பக்தர்கள்!

கேரளத்திலிருக்கும் பணக்கார கோவிலான திருச்சூர் கோயிலில் நடந்த பூரம்' விழாவின் போது ஏராளமான பக்தர்கள் குழுமியிருந்தார்கள்; காசைக் கரியாக்குவதற்கென்றே வாணவேடிக்கைகளும் நடந்தன, அப்போது-

வெடி வாணங்களின் குவியல்மீது நெருப்பு விழவே சுற்றுப்புறம் முழுவதும் தீ பரவியது; 'அக்கினி பகவானின்' ஆவேசத் தாக்குதலைத் தாங்க முடியாத பக்தர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விழுந்தடித்துக் கொண்டு ஓடினர்கள். பக்த, பக்தைகள் ஓடிய போது நெரிசலில் சிக்கிய பல சிறுவர்களும், சிறுமிகளும், குழந்தைகளும் காயமடைந்தனர்.

பக்தர்களை அக்கினி பகவான் ஓட ஓட விரட்டியதால் ஐவர் உயிரிழந்தனர்! நூறு போகளுக்கு மேல் தலைக் காயங்களுடன் மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

பல கடைகள் வெறும் சாம்பல் மேடாகிப் போயின.

'நம் நாடு' விற்பனையாளர்கள் கவனிக்க

'நம் நாடு' விற்பனையாளர் அனைவருக்கும் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகையை 8-ந் தேதிக்குள் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவேண்டும். தொகையை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

நிர்வாகி,
'நம் நாடு',

நீதி விசாரணை

எஸ்.ஜி

கடிதம்—பதில் கடிதம், பதிலுக்குப் பதில் கடிதம். இப்படி ஆறுக்கு மேற்பட்ட கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன; அதுவும் 20 நாட்களுக்குள்!

ஒரே கட்சித் தலைவர்கள்; ஒரே அமைச்சரவையின் பொறுப்புமிக்க அங்கங்கள்; ஒரே நகரத்தில் வசிப்பவர்கள்: ஒரே செயலகத்தில் உள்ள அமைச்சகங்களில் அலுவல் ஆற்றுபவர்கள். அவர்களுக்குள்ளே கடிதப் போக்குவரத்துகள். ஆம்! பிரதமர் மொரார்ஜியும் உள்துறை அமைச்சர் சரண்சிங்கும்தான் கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கூடிப் பேசிக் கொள்ள நிரம்ப வாய்ப்புகள் இருக்கின்றன எனினும், கூடிப் பேசிக் கொள்ளவில்லை. சந்தித்து விவாதித்துக் கொள்ளலாம் எனினும் அப்படிச் செய்யவில்லை. கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ளனர். அதில் இன்னும் வேடிக்கை—இல்லை, வேதனை என்னவென்றால் இரகசியக் கடிதங்களாம் அவைகள்! ஆனால், அக்கடிதங்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தப்படுகின்றன. இன்னும் வேதனை என்னவென்றால் கடிதத்தில் உள்ள செய்திகளே பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுதான்!

‘இப்படி நடக்கலாமா? — இன்று நாட்டு மக்கள் இப்படி கேட்கத் தயாராகயில்லை இது போன்ற எத்தனையோ வேதனை வேடிக்கைகளின் விளைநிலமாக ஜனதா அரசு இருப்பதை அவர்கள் உணர்வார்கள்.

கடிதத்தின் மையப்பொருளே நீதி விசாரணை. அதுவும் பிரதமர் மொரார்ஜியின் மகன் காந்தி தேசாய்மீது நீதி விசாரணை வைக்க வேண்டும் என்பதுதான்!

பிரதமர் மொரார்ஜியின் மகன் காந்தி தேசாய்மீது அடுக்கடுக்கான புகார்கள். பல்வேறு வணிக நிறுவனங்களுடன் அவருக்கு மறைமுகத் தொடர்புகள் என்று குற்றச்சாட்டு! இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் இப்புகார்கள் நேரு காலத்திலேயே பிறந்துவிட்டனவாம். இதற்கெல்லாம் மேலே இந்திராகாந்தி காலத்தில் அவரது மகன் ‘இளவரசன் சஞ்சை காந்தியை மையமாகக் கொண்டு உருவாகி நாட்டை உருக்குலைத்த ‘காக்கஸ்’ (Caucus) போல இன்று பிரதமர் மகன் காந்தி தேசாயை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள “காக்கஸ்” அரசுப் பணிகளில் தலையிடுகிறது என்று குற்றச்சாட்டு வலிமையாக எழுப்பப்படுகிறது.

அரசியல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் உருவாகும் “அதிகார மையம்” (Extra Constitutional Powr Centre) ஜனநாயகத்திற்கு சமாதி எழுப்பிவிடும் என்பது இந்திய நாட்டின் கசப்பான அனுபவம். அப்படிப்பட்ட ‘காக்கஸ்’ உருவாகவில்லை என்று மறுக்க வந்த காந்தி தேசாயே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகியுள்ளது என்பதையே மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதைப் போல் பதில் கூறியுள்ளார்,

காந்தி தேசாய் பற்றிய புகார்களின் எண்ணிக்கை வளர வளர — புகார்களின் கோப்புகள் குவியக் குவிய உள்துறை அமைச்சர் கவலை கொள்ளத் தொடங்கினார். ஜனதா அரசோ தூய நிர்வாகத்தை மக்களுக்கு அளிக்கும் என்று தேர்தல் காலத்தில் உறுதியளித்தது. அந்த உறுதிமொழியை அடிக்கடிப் பிரதமர் நிறைவேற்றப் போவதாக வற்புறுத்திப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் மகன் மீதே புகார்கள். அந்தப் புகார்கள் ஆதாரமற்றவைகள் என்று மெய்ப்பித்துக் காட்டினால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். எனவே, உள்துறை அமைச்சர் சரண்சிங் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்கு அனுமதி கோரி பிரதமர் மொரார்ஜிக்குக் கடிதம் எழுதினார்.

ஆனால் அதற்கு “ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு

அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜிநாமா செய்தது உண்டு.

ஆனால், அப்போதெல்லாம் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சியிலே இருந்தது அதுவும் காங்கிரசுக் கட்சியாகவே இருந்தது. அரசின் தலைமைப் பொறுப்பிலே இருந்தவர்கள் தங்கள் கட்சிக்காரர்களைக் காப்பாற்றும் முயற்சியிலேதான் இருந்தார்கள். தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களின் அழுத்தத்திற்குப் பணிந்துதான் நீதி விசாரணைக்கு மத்திய சர்க்கார் உத்தரவிட்டது. ஆனால், காலப்போக்கில் அரசியலில் மாற்றம் நிகழத் தொடங்கியது. 1967-ம் ஆண்டு அரசியல் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது மத்தியிலே ஒரு கட்சியும் மாநிலங்களில் வேறு கட்சி

ணைக்கு உத்தரவிடப்பட்டது இந்திரா அரசால்.

இப்படி ஒரு அபாயம் தோன்றுவதை கழக அரசு முன்கூட்டியே உணர்ந்தது. எனவே, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை தவிர்க்கும் முயற்சியை கழக அரசு மேற்கொண்டது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனைக்கு ஆளாவார்கள். குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று நிரூபிக்கப்பட்டால் குற்றம் சாட்டியவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்று சட்டமியற்றியது கழக அரசு அந்தச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தவர்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழுந்த காரணத்தால் குற்றம் சாட்டப்பட்டவரை அமைச்சராக்கி வைத்துள்ள அ. இ. அ. தி. மு. க அரசு அவரைக் காப்பாற்றுவதற்காகவே அச்சட்டத்தையே ரத்துச் செய்துவிட்டது. அச்சட்டத்தை ரத்துச் செய்தபோது வேறோர் சட்டம் கொண்டு வரப்படும் என்று முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் சட்டமன்றத்தில் உறுதியளித்தார். ஆனால், இன்றுவரை அப்படி ஒரு சட்டத்தை அ. தி. மு. க அரசு கொண்டு வரவில்லை. திரைப்படத்தில் நடிக்கத் தீவிரம் காட்டும் எம். ஜி. ஆர். அச்சட்டம் கொண்டு வருவ

களாகவும் ஆக்கிய ஜனதா அரசு சர்க்காரியா கமிஷனைப் பற்றி மௌனம் சாதித்து விட்டது.

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களைத் தவறு செய்யாது தடுப்பதற்காக என்று தொடங்கப்பட்ட விசாரணை அரசியல் எதிர்க்கட்சிக்காரர்களைப் பழிவாங்குவதற்கு என்று வளர்ந்து இன்று ஒரே கட்சிக்குள்ளேயே பலப்பரீட்சை செய்துகொள்வதற்கும் ஒரே கட்சியிலுள்ள போட்டியாளர்களைப் பதம் பார்ப்பதற்கும் பயன்படுத்துவது என்னும் நிலைக்கு வந்துள்ளது. ஆம், பகுகுணமீது நீதி விசாரணை கோரப்படுகிறது. அவர்கள் கட்சிக்காரர்களாலேயே! பிரதமர் மகன்மீது நீதி விசாரணை கோரப்படுகிறது. அதே கட்சிக்காரர்களாலேயே! உள்துறை அமைச்சர் குடும்பத்தினர்மீது நீதி விசாரணை கோரப்படுகிறது அதே கட்சிக்காரர்களாலேயே!

ஜனதாவில் சில தலைவர்கள் தங்களைப் புண்ணியர்களாக புனிதர்களாகப் பாவித்துக் கொண்டு தி. மு. க.-வின் நியாயமான கோரிக்கையை நிராகரித்தார்கள். இன்று அவர்கள்மீதே நீதி விசாரணை கோரப்படுகிறது. அதுவும் அவர்களைச் சேர்ந்தவர்களாலேயே!

முடிந்தகதையல்ல-

நீதி விசாரணை வைக்க முடியாது’ என்று பதில் எழுதுகிறார் மொரார்ஜி.

“ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதை விசாரணைக் கமிஷனே தீர்மானிக்கட்டும். நாம் நீதி விசாரணைக்கு உத்தரவிடுவோம். அனுமதி வழங்குங்கள்.’ என்று சரண்சிங் பதில் எழுதுகிறார்.

“அப்படிப் பார்த்தால் உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மீதுகூடத்தான் புகார்கள் எழுப்பப்படுகின்றன. அப்புகார்களின்மீது நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன்?” என்ற வினவை விடையாக எழுப்புகிறார் மொரார்ஜி.

“யாரைப் பற்றிப் புகார் எழுந்தாலும் விசாரிக்கத்தான் வேண்டும். என்னுடைய குடும்பத்தார்களையும் நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம். உங்கள் மகன் காந்தி தேசாயையும் நீதி விசாரணைக்கு உட்படுத்துவோம்.” இப்படி மீண்டும் வற்புறுத்துகிறார் சரண்சிங்.

‘பொதுவாழ்வில் ஈடுபடுவோர் மக்கள் தந்த அதிகாரத்தைத் தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளப் பயன்படுத்தக்கூடாது. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சொந்த லாபத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடாது. வேலியே பயிரை மேயக்கூடாது’ — இப்படிப்பட்ட நல்ல எண்ணத்தில்தான் — பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களைத் தவறிழைக்காமல் தடுப்பதற்குத்தான் நீதி விசாரணை ஏற்படுத்துவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தின்கீழ் நேரு காலத்திலேயே பல மத்திய மாநில அமைச்சர்கள்மீது நீதி விசாரணை வைக்கப்பட்டது. அவ்விசாரணைகளின் பயனாக சில பல

களும் ஆட்சியில் அமரும் நிலை அரும்பியது.

இவ்வரசியல் மாற்றம் நீதி விசாரணை பற்றிய உணர்விலும் பலத்த மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. அதிகாரத்தில் இருப்பவர்களைத் தவறிழைக்காமல் தடுப்பதற்கான கருவியாக இருந்த நீதி விசாரணை அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் கருவியாய்ப் பயன்படுத்தும் முயற்சி தோன்றியது. குறிப்பாக மத்திய சர்க்கார் தனக்குக் கீழ்ப்படியாத சுயேச்சையான மாநில சர்க்கார்களைப் பழிவாங்க நீதி விசாரணையைப் பயன்படுத்தும் அபாயம் தோன்றியது. ஆதாரமற்ற புகார்களை எழுப்பத் தூண்டி—தூண்டப்பட்டு எழுப்பப்பட்ட புகார்களின் அடிப்படையில் நீதி விசாரணையைக் காட்டி நிர்ப்பந்திக்கும் நியாயமற்ற போக்கு தலை தூக்கத் தொடங்கியது. அத்

தில் தீவிரம் காட்டவில்லை.

தி.மு.க அரசைக் கவிழ்த்து, தி. மு கழகத்தைப் பழிவாங்குவதற்காகவே இந்திராகாந்தி நீதி விசாரணை வைத்தார். இது உலகம் அறிந்த உண்மை. ஏன், ஜனதா தலைவர்களே உணர்ந்து பேசிய ஒன்று. நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் ஜனதாத் தலைவர்களே சர்க்காரியா கமிஷன் அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்டது என்று வெளிப்படையாகப் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். சர்க்காரிய கமிஷனில் தி. மு. க. அமைச்சர்களின் சார்பில் வாதாடிய சாந்திபூஷன் அவர்களே மத்திய அரசின் சட்ட அமைச்சராகியுள்ளார். ஜனதா மத்தியில் அரசு அமைத்துள்ளது, தி. மு. க. நியாய

சர்க்காரியா கமிஷன் விசாரணையைப் பற்றிக் கழகத் தலைவர் சில தெளிந்த கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். அதிலே ஒன்று நீதி விசாரணை முடிந்த கதையல்ல. தொடர் கதை எனபதாகும்.

ஆம்; அது தொடர்கதையாக வளர்ந்து வருகிறது. அந்த சர்க்காரியா கமிஷன் கலைஞரை அழித்துவிடும்; கழகத்தை ஒழித்துவிடும் என்று கனவு கண்ட எம். ஜி. ஆர். இப்போது நிலைமை கண்டு தெளிவடைவார் என்று நம்புவோமாக. கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும் நிலம் உள்ளளவும் அவர் அதிகாரத்தில் இருந்துவிடப் போவதில்லை. விரைவாகவோ அல்லது மெதுவாகவோ அவர் அதிகாரத்திலிருந்து அகற்றப்படுவார். நாட்டின் நிலைமைகளையும் நடக்கும் நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது மெதுவாக என்பதைவிட விரைவாகவே அவர் பதவியிலிருந்து வெளியேற்றப்படலாம். அதற்குப் பின் அவர்மீது எத்தனை விசாரணைகளோ? ஏன் பத

தொடர்கதையே!

தகைய தீய போக்கிற்கும் அபாயத்திற்கும் தி. மு. கழக அரசு முதற் பலி ஆகியது. 1972-ல் அரசியல் காழ்ப்பில் எழுப்பப்பட்ட புகார்களைக் காரணம் காட்டி 1976-ல் தி. மு. க. அரசு கலைக்கப்பட்டு நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது இந்திரா அரசால்.

இப்படி ஒரு அபாயம் தோன்றுவதை எதிர்த்த கழக அரசுமுதற்பலி ஆகியது. 1972-ல் அரசியல் காழ்ப்பில் எழுப்பப்பட்ட புகார்களைக் காரணம் காட்டி 1976-ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு நீதி விசார

மாக எதிர்பார்த்தது சர்க்காரியா கமிஷனை ஜனதா அரசு ரத்துச் செய்யும் என்று. ஆனால், அவ்வரசு அப்படி எதுவும் செய்ய முன் வரவில்லை. குறைந்தபட்சம் மறு விசாரணைக்குக்கூட உத்தரவிடவில்லை அக்கட்சியின் தலைவர்கள்மீது இருந்த எத்தனையோ வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்ட ஜனதா அரசு அப்படி வழக்குகளிலே சிக்கவைக்கப்பட்டவர்களை எல்லாம் விடுவித்து மத்திய அமைச்சர்களாகவும் மாநில அமைச்சர்களாகவும் ஆளுநர்

வியிலே இருக்கும் போதேகூட அது வரக்கூடும் என்றுதான் எதிர்பார்த்தோம். அப்படி வந்துவிடாமல் இருப்பதற்குத்தான் அவர் ‘தேசாய் சரணம் மொரார்ஜி’ என்று அர்ச்சித்துக் கொண்டுள்ளார். எம். ஜி. ஆர். மொரார்ஜி தன்னைக் காப்பாற்றுவார் என்று வழிபட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால், அந்த வழிபாட்டிற்குரிய தேவனின் மகன்மீதே அல்லவா விசாரணை வரும் போலிருக்கிறது!

"மனப்பான்மை மாறவில்லை" - ஷேக் அப்துல்லா

[காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக்முகம்மது அப்துல்லா அவர்கள், 'சண்டே' ஆங்கில வார ஏட்டுக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியின் பிற்பகுதி இது. "காஷ்மீர் மக்களுக்கு இந்தியாவைத் தவிர வேறு போக்கிடமில்லை" என்று அவர் இதில் வலியுறுத்துகிறார்.]

கே: முல்லாக்களை எப்படிச் சமாளித்தீர்கள்?

ப: நானே ஒரு முல்லாவாக மாறிவிட்டேன் (சிரிக்கிறார்). நிலைமை படுமோசமாக இருந்ததால், முதலில் அவர்கள் என்னுடன் ஒத்துழைக்கவே செய்தார்கள். ஆனால், பின்னர் என்னுடன் இருந்தால் தங்களுக்கு இழப்பு நேரிடுமெனக் கருதி, தனி வழியே சென்றுவிட்டார்கள். எங்கள் இயக்கத்தை முறியடிக்க முயன்றார்கள். ஆனால் நாங்கள் வெகுதூரம் முன்னேறிச் சென்றுவிட்டோம். அது ஒரு நெருக்கடியான நேரம். மீண்டும் 1947இல் ஒரு நெருக்கடி தோன்றியது. அப்பொழுது நாடு முழுவதுமே இருளில் மூழ்கியது; நாடெங்கிலும் வகுப்புக் கலவரங்கள். பஞ்சாபில் ஒரு பக்கம் ஆர். எஸ். எஸ் இயக்கத்தினர் படுகொலைகளைப் புரிந்தார்கள். இன்னொரு புறம் முஸ்லீம் அல்லாதவர்களை முஸ்லீம் லீகினர் கொன்று குவித்தார்கள். இரு வகுப்புவாதங்களுக்கிடையில் சிக்கித் தவித்தோம். வடக்கிலிருந்து வந்த முஸ்லீம் வகுப்புவாதமும், தெற்கிலிருந்து ஆ எஸ் எஸ். கொண்டு வந்த இந்து வகுப்புவாதமும் சூறையாடின. அந்த நேரத்தில்தான் நாங்கள் முக்கியமான முடிவை எடுத்தோம். பெரும்பாலும் முஸ்லீம்கள் வாழும் ஒரு மண்டலத்தைச் சார்ந்தவர்கள் எடுத்த இந்த முடிவு இயல்புக்கு மாறானதுதான் என்றாலும் நாங்கள் அந்த முடிவை எடுத்தோம்.

கே: 1953-க்குப் பின் சிறைச்சாலையில் உங்கள் அனுபவம் பற்றி இப்போது என்ன கருதுகிறீர்கள்?

ப: அது மூன்றாவது நெருக்கடி. அப்போது, மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றில் நாங்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு சோதனை ஏற்பட்டது அப்பொழுது சிறையில் என்னுடனிருந்த சகாக்கள் "இப்பொழுது என்ன இருக்கிறது? இதுதான் முடிவு என்றால், நாம் இந்தியாவுடன் ஏன் சேர வேண்டும்? பாகிஸ்தானுடன் ஏன் சேரக்கூடாது?" என்று கேட்டார்கள் ஆனால், பாகிஸ்தானையோ, இந்தியாவையோ விட நாங்கள் கொண்ட கொள்கைகள்தாம் முக்கியமானவை என்று நான் அப்போது கருதினேன். இந்தியாவுடன் நாங்கள் சேர்ந்தது, மதச்சார்பின்மை, சோசலிசம் என்ற கொள்கைகளுக்காகத்தான். பிரிவினைக்குப் பிறகும், இரத்தக் களரிக்குப் பின்னரும மதச்சார்பற்ற பாதையையே இந்தியா தேர்ந்தெடுத்தது. மானுடம் மேலோங்கி நிற்கும் ஓர் அரசை உருவாக்க பாரதம் விரும்பியது. அத்தகைய குறிக்கோள் எதுவும் பாகிஸ்தானுக்கு இருக்கவில்லை. இந்தியாவிலிருந்த ஒரு சிலர் எங்களுக்குத் தவறிழைத்திருக்கலாம். ஆனால், இந்திய மக்கள் அனைவர் மீதும் நாங்கள் குற்றஞ் சுமத்த முடியாது. இந்தக் குறிக்கோள்களை இந்தியா இறுகப் பற்றியிருக்கும் வரையிலும், நம் மக்களுக்கு இந்தியாவைத் தவிர வேறு போக்கிடமில்லை.

கே: நெருக்கடி நிலையின் போது அந்தக் குறிக்கோள்களிலிருந்து நாம் விலகிச் சென்றுவிட்டோம் என்று கருதுகிறீர்களா?

ப: மைய அதிகாரக் குவிப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம் எனலாம். அது இறுதியில் தனி நபர் சர்வாதிகாரத்தில் கொண்டுபோய் விட்டிருக்கும். ஆனால், அதற்கும் நான் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கும் தொடர்பேதுமில்லை

கே: ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கவேண்டுமென்பது எனது நெடுநாளைய ஆசை. தேசிய அரசியலில் ஈடுபாடு கொள்வதுபற்றி நீங்கள் ஏன் சிந்திக்கவில்லை? இந்தியாவில் எங்கு சென்றாலும் கூட்டத்தைக் கவர்ந்திழுக்கும் ஒரே முஸ்லீம தலைவர் நீங்கள்தான் என நினைக்கிறேன்!

ப: இந்தியா பற்றி நிற்கும் குறிக்கோள்களுக்கான ஒரு பரிசோதனைச் சாலையாகக் காஷ்மீரை நான் கருதுகின்றேன். இந்தியா கவர்ந்து கொள்ள விரும்புகிற ஒரு மண்டலம் அல்ல காஷ்மீர். நாம் காஷ்மீரில் தோல்வி கண்டால், நாட்டின் பிற பகுதியிலும் தோல்வியுறுவோம். பல தொல்லைகளுக்கிடையில் இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கும் சில உன்னதக் குறிக்கோள்களைக் காஷ்மீர் ஏற்று நிற்கின்றது. எனவே, அவ்விதம் சில குறிக்கோள்களைக் காஷ்மீர் ஏற்று நிற்கிறதென்றால், நமது குறிக்கோள்கள் தோல்வியடையாதவாறு கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் நாட்டின் பிற பகுதிகளுக்குக் காஷ்மீர் முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

கே: நீங்கள் கூறும் அந்தக் குறிக்கோள்களை ஜனதா அரசு எந்த அளவுக்குப் பின்பற்றுகிறது?

ப: தற்சமயம் ஜனதா அரசு மிகவும் எச்சரிக்கையோடு செயல்படுவதாக எண்ணுகிறேன். ஆனால், மன ஒருமைப்பாடு ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. பல்வேறு பகுதிகளிலிருந்து. பல்வேறு குறிக்கோள்களுடன் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் குறிக்கோள்களுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர்கள் அவர்கள் எந்த அளவுக்கு முற்றிலும் மன மாற்றமடைந்து ஒருங்கிணைந்து புதிய கொள்கையை உருவாக்குகிறார்கள் என்பதை இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கே: புதிய அரசின் சில முடிவுகளைக் கவனிப்போம். சிறுபான்மையோர் ஆணையம் பயனுடையதாயிருக்குமா?

ப: அது செயல்படும் முறையைப் பொறுத்தது முறையாகச் செயல்படாவிட்டால், அது வெறும் கண்துடைப்பாய்த்தான் அமையும்.

கே: இந்த ஆணையத்தின் அதிகாரங்கள் தேவைதானா?

ப: அந்த ஆணையத்தின் அலுவல்கள் என்ன, அது என்ன செய்யப்போகிறது என்பதே எனக்குத் தெரியாது.

கே: அது என்ன செய்ய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

ப: எனக்குத் தெரியாது. இந்த ஆணையம் அவசியம்தானா என்பதே எனக்குப் புரியவில்லை. பிரச்சினைகளை நாம் நன்கறிவோம், அரசமைப்பில் கூறப்பட்டிருக்கும், உத்தரவாதங்கள் உண்மையிலேயே வழங்கப்பட வேண்டுமெனச் சிறுபான்மையினர் கோருகிறார்கள். இங்குக் குறுக்கிடுவது மனிதாபிமானப் பிரச்சினை. அரிஜனங்களுக்கு அரசமைப்பு எவ்வளவோ பாதுகாப்பை அளித்திருக்கிறது. இருந்தாலும் எங்கு பார்த்தாலும் இன்றும் அவர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். நம் மனம் இன்னும் தெளிவடையவில்லை. சட்டங்கள் போதுமானதாக இல்லை. மனப்பான்மைதான் இன்று ஆதிக்கம் செலுத்துகிறது. நமது சிறுபான்மையினரிடம் தாராளமனதுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களையும், நமது தொழிலிலும், பணிகளிலும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களை நம் சகோதரர்களாக ஏற்றுக்கொண்டு விட்டோமானால், பிரச்சினை தீர்ந்துவிடும்.

கே: இன்றையத் தலைமை இத்தகைய மனப்போக்குடன் நடந்துகொள்ளும் என நினைக்கிறீர்களா?

ப: (சிரிக்கிறார்). அது முற்றிலும் வேறு பிரச்சினை. அது பல சூழ்நிலைகளைப் பொறுத்தது

கே: எதைப் பொறுத்தது?

ப- எதைப் பொறுத்தது என்றால்......நாம் சிறிது காலம் பொறுத்திருந்து கவனித்து வரவேண்டும். அவர்கள் அரங்கிற்கு அண்மையில் தான் வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தோல்வியுற்றால்......

கே: திருமதி காந்தி மீண்டும் வந்துவிடுவார், அப்படித்தானே?

ப: திருமதி காந்தி அல்ல. அவர்கள் வந்தால் தொல்லைதான்.

கே: திருமதி காந்தி மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்று நீங்கள் கருதவில்லையா?

ப: அற்புதங்கள் நிகழ்ந்திருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அத்தகைய அற்புதம் நிகழலாம். ஏனென்றால், ஜனநாயகக் கலையில் நம் மக்கள் இன்னும் அனுபவம் பெறவில்லை. அவர்கள் இன்னும் பாமரர்களாகவே இருக்கிறார்கள். நிலைமைகளை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே, அவர்கள் தவறான வழியில் இழுத்துச் செல்லப்படக் கூடும்!

எங்கே இருக்கிறது மதச்சார்பற்ற தன்மை?

'மதச்சார்பற்ற......' என்று சொல்லிக் கொள்ளும் அரசியலமைப்புச் சட்டம் இருக்கின்ற நம் இந்திய நாட்டில் அவ்வப்போது நடைபெறும் சிலநிகழ்ச்சிகளைக் கேள்விப்படும்போது சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை.

கேரளத்துக் குருவாயூர் கிருஷ்ணன் கோவிலுக்குள் ஜோசிபிரகாஷ் என்ற நடிகரும் அவருடைய நண்பரும் நுழைந்து பயபக்தியோடு 'சாமி தரிசனம்' செய்த போது அங்கிருந்த 'கிருஷ்ண பக்தர்கள்' ஆத்திரமடைந்து அந்த இருவரையும் காவலர்களிடம் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள் காரணம்—நடிகரும், அவர் நண்பரும் கிறித்துவர்கள்! இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அந்தக் கோவிலுக்குள் வந்து 'கும்பிட' முடியுமாம்!

வாங்குவீர் என். ஜீ. இ. எப். மோட்டார்கள் அணடு பம்புகள்!

மேற்கு ஜெர்மனி கூட்டுறவுடன் இந்திய அரசால் தயாரித்து வெளிவரும் மோட்டார் என். ஜீ. இ. எப்.

விவசாயின் தோழன் என். ஜி. இ. எப். நீண்டநாட்கள் நீடித்து உழைப்பது! மின்சார செலவு, மிக மிக குறைவு!!

மின்சாரம் அதிகமானாலும், குறைவானாலும் ஒரே சீராக சூடாகாமல் ஓடுவது ஐ எஸ். ஐ. சான்றும், 18 மாதங்கள் உத்திரவாதம் உள்ளது. நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்க இன்றே வாங்குவீர் என். ஜீ. இ. எப். மோட்டார்கள் அண்டு பம்புகள்.

டீலர்கள்:—செங்கை, தெ. ஆற்காடு, வட ஆற்காடு (பாண்டி) ஜில்லாக்கள்:

விஜயலட்சுமி ஏஜன்சீஸ் (சென்னை)

வெண்ணங்குப்பட்டு கோட்டைக்காடு போஸ்ட், மதுராந்தகம் தாலுக்கா - 603 304.

குறிப்பு:— தாலுக்காவாரியாக முன் பணம் கட்டக்கூடிய தகுதி வாய்ந்த ஏஜண்ட்கள் தேவை.

—கே. ஜானகிராமன்.

திருவாளர் முரண்பாடு பேசுகிறார்!

நான் யார் தெரியுமா? என் புகழைத் தாங்கள் அறிவீரோ? நான்தான் கோலம்; அலங்கோலத்தின் உச்சம்; முரண்பாட்டின் மொத்தஉரு; முடிவில்லாக் குழப்பம்! என்னடா! இவ்வளவு உண்மைகளைப் பேசுகிறானே என்று எண்ணுகிறீர்களா? கவலை வேண்டாம்; நானேயே இவ்வளவும் இல்லையென்றால் போச்சு! யாரென்னைக் கேட்பதற்கு? என் பொதும(ா)க்களைப்பற்றி எனக்குத் தெரியாதா?

அன்று கூடத்தான் சொன்னேன். "நாங்கள் சுத்த சுயம் பிரகாசங்கள். கறைபடியாத கரங்கள்; எங்கள் ஆட்சியிலே மருத்துவக் கல்லூரித் தேர்வில் ஊழல் இல்லை இருப்பதாக எவரேனும் சொன்னால் பதவி விலகத் தயார். எதிர்க்கட்சி குறிப்பிடும் நீதிபதியையே விசாரணைக்குத் தலைவராக நியமிக்கிறேன். நிரூபிக்கத் தயாரா" என்றெல்லாம் ஏதேதோ பிதற்றினேன்! என் புகழ் பாடும் 'தினமணி' காரர்கூட மூணுபத்திச் செய்தியில் (17—8—77) அதைப் பெரிதுபடுத்திப் போட்டார்.

அத்தோடு விட்டார்களா பாவிகள்! மேலவையில் கேட்டார்களே ஒரு கேள்வி! 'ஊழலை நிரூபிக்கத் தயார். விசாரணை வைக்கத்தயாரா?" என்று விடாபிடி வீராசாமி கிடுக்கிப்பிடி போட்டார்! நான் என்ன செய்தேன் தெரியுமா? சத்தமே போடவில்லை; வேறென்ன செய்ய? வாய்ப் பிதற்றலுக்கு வாங்கிக்கட்டிக் கொள்ள வேண்டியதுதானே.

மதுரையிலே மாணவர்கள் போராட்டம் என்றார்கள். என்ன 'ஸ்டண்ட்' அடிக்கலாம் என்று பார்த்தேன். (சினிமாப்புத்தி போகவில்லை என்று எண்ணுகிறீர்களா?) உஹூம்! 'உன்னைவிடமாட்டேன்' (என்ன போரடிக்கிறீர்கள் சினிமாவைத்தான் சொல்கிறேன்) போட்டேனே ஒரு போடு! எல்லாரும் அசந்துவிட்டார்கள்! அது என்ன என்று கேட்கிறீர்களா? சும்மா ஒரு தமாஷ்! அடிபட்ட மாணவன் ஒருவன் உயிருக்கு அரசியல் லாபம் தேட ஒருவர் ஐந்து லட்சம் விலை பேசினார்" என்று சொன்னேன்.

(அண்ணா 25—10—77)

அப்பொழுதாவது விட்டார்களா? மாட்டார்களே! 'முரசொலி' (27—10—77) பெட்டிச் செய்தியில் "யார் அந்த ஐந்து லட்சம் பேசிய புரட்சிவாதி? இது உண்மையானால் அதற்கு விசாரணை வை; அதன் பின்னணியை வெளிப்படுத்து" என்று எழுதினார்கள். ரொம்ப நாள் ஆச்சே, சும்மா தமிழ் நாட்டு மக்களை சினிமா பாணியிலே ஒரு திகில் பண்ணணும்னு நினைச்சா, பெரிய வம்பாப் போச்சுன்னு அப்புறம்தான் புரிஞ்சுது! ஆனால் காலங் கடந்த ஞானோதயம்! ஒரு வழியா அதையும் சமாளிச்சேன், எப்படி? மௌனம்! மறுபடியும் அதே மௌனம்! இதைவிட முன்னாலேயே மௌனமா இருந்திருக்கலாமே என்கிறீர்களா? என்ன செய்வது? என் சாதக (!) பலன் அப்படி!

இந்திரா அம்மையார் சென்னைக்கு பெருத்த வரவேற்பிற்கு (!) இடையில் வந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே. ஏதோ தொட்ட குறை, விட்டகுறை, அவரை விமான நிலயத்தில் சந்தித்தேன். பிறகு திரும்பும் வழியில் நிருபர்கள் கேள்விகளை கேட்டுத் தொலைத்தார்கள். இல்லையில்லை துளைத்தார்கள். "மரியாதைக்காகத்தான் சந்தித்தேன்" (தினமணி 30—10—77) என்று சொல்லி வைத்தேன்.

அப்பொழுதுஎனக்கென்ன தெரியும்? பிற்பொழுது எனக்கொரு நெருக்கடி காத்திருக்குமென்று.

டெல்லிக்குப் போனேன். அதே கேள்வியைக் கேட்டார்கள். அதே பதிலைச் சொல்ல முடியுமா? நான் போனது டெல்லிபாச்சே எனக்கு வந்தது நெருக்கடியாச்சே! "வரவேற்க நான் போகவில்லை. அவரை எச்சரிக்கவே சென்றேன்" என்று சொன்னேன். இது எப்படி இருக்கு? என்னடா முன்னாலே என்னவோ சொன்னான் பின்னாலே என்னவோ சொல்றானே என்கிறீர்களா? அதெல்லாம் உங்களுக்குப் புரியாது! எனக்கும் கூடத்தான் புரியாது!

இந்தக் கதை தெரியுமா உங்களுக்கு? 'கறுப்புக்கொடி போராட்டத்தில் சிறையில் அடைபட்ட தலைவர்களுக்கு வீட்டிலிருந்து சாப்பாடு எடுத்துப் போய்க் கொடுக்கலாம்; அதற்கு நானேஏற்பாடு செய்துள்ளேன்" என்று ஒரு நாள் சொன்னேன். எப்பொழுதாவது நமக்குப் பயன் படாதா என்றுதான் சொன்னேன்!

ஆனால், என்ன ஆயிற்று தெரியுமா? என் பேச்சை நம்பி சைதாப்பேட்டை புருேஷாத்தமன் வீட்டார் சிறைக்குச் சாப்பாடு எடுத்துப் போனார்களாம். ஆனால், சிறை அதிகாரிகள் அதற்கு விதியில்லை என்று திருப்பி அனுப்பி விட்டார்களாம். என்னால் நம்ப முடியவில்லை எனக்கு மட்டும் 'விதி யிருக்கிறது. அது என்னை என்னென்னவோ பேசச் சொல்கிறது. தமிழ் நாட்டின் தலைவிதி சும்மா விடாது போலிருக்கிறது!

ஒருமுறை பாருங்கள்; பல பெரிய அறிஞர்கள் கலந்து கொண்ட விஞ்ஞானிகள் கருத்தரங்கில் என்னுடைய பொருளாதார அதிமேதா விலாசத்தை வெளிப்படுத்தினேன். அதையும் என் பஜனை பாடும் இந்தப் பத்திரிக்கையிலே (23—12—77) பெட்டிச் செய்தியாகப் போட்டார்கள். என்னவோ புள்ளி விபரங்களைக் கரைத்துக் குடித்தவன்போல் "மத்திய அரசின் மானியத் தொகையான 368 கோடி ரூபாயிலிருந்துதான் மாநிலத்தின் நாலரைக் கோடி மக்களுடைய மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுகிறது" என்றேன். விஞ்ஞானிகள் கூட்டமாயிற்றே. நிதிநிலைமை பற்றி யாருக்கு என்ன தெரியப் போகிறது என்று எண்ணி நான் அப்படிப் பேசவில்லை. சத்தியமாகச் சொல்கிறேன். எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அதைத்தான் சொன்னேன்.

திரும்பவும் வரிந்து கட்டிக் கொண்டு வந்துவிட்டார்கள். "மானியம் என்றால் என்ன? சட்டப்பூர்வமாக கிடைக்கும் பங்குத்தொகை எவ்வளவு? கிராண்ட்ஸ் - இன் - எய்ட் (Grants - in - aid) என்றால் என்ன? என்றெல்லாம் கேட்டு நான் கொடுத்த கணக்கு எவ்வளவு தவறு என்பதைத் தெளிவாக அறிக்கை மூலம் (முரசொலி 24-12–77) விடுத்தார்கள். இதெல்லாம் எனக்குத்தெரியுமா? இல்லை. சொன்னால்தான் புரியுமா? ஒரே குழப்பம்தான் போங்கள்! அப்புறம் என்னவோ சொல்லி வைத்தேன் "மக்களிடம் எதையும் மிகைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றுதான் அப்படிச் சொன்னேன்" என்றேன் நான் பேசிய இடம் அறிவாளிகள் கூடியிருந்த கருத்தரங்கு ஆயிற்றே. அவர்களிடம்கூட மிகைப்படுத்தித்தான் சொல்ல வேண்டும் என்று சொன்னால் நம்புவார்களா என்கிறீர்களா? நம்பத்தானே வேண்டும். அப்படி நான் அன்று சொன்னதை நீங்கள் நம்பித்தானே இன்று வந்திருக்கிறேன்.

கறுப்புக் கொடிப் போராட்டம் தொடர்பாக சைதாப்பேட்டையில் துப்பாக்கிச் சூடு நடந்தது. அப்பொழுது, எப்பொழுதும் போல் நான் வெளியூரிலிருந்தேன். செய்தி கேட்டவுடன் ஏதாவது சொல்லவேண்டும் என்று தோன்றியது. சொல்லியும் விட்டேன். "மதுரை, திருச்சி, சென்னை ஆகிய மூன்று இடங்களிலும் நடந்த அத்தனை வன்முறைகளுக்கும் விசாரணை வைக்கப்படும்' என்றேன். (மாலை முரசு 30—10—77) பின்னாலே யாரோ சொன்னார்கள் அப்படி விசாரித்தால் எல்லா விஷயமும் வெட்ட வெளிச்சமாகி விடும் என்று.

உடனே பிளேட்டை எப்பொழுதும்-போல் திருப்பிப் போட்டுவிட்டேன். "சென்னையில் துப்பாக்கிச் சூடு ஏன் நடந்தது? என்பதற்கு மட்டும் தான் விசாரணை" என்று மாற்றிச் சொன்னேன். யாரும் அதைப் பெரிது படுத்தவில்லை. அவர்களுக்குத்தான் தெரியுமே, நான் ஒரு அவசரக் குடுக்கை அநியாய வாக்குறுதி அர்த்தமற்ற பிதற்றல் என்று,

"இது போதுமடா சாமி தாங்காதடா பூமி' என்கிறீர்களா? இந்த ஒன்றை மட்டும் கேட்டு விட்டுப் போங்கள் ஒரு முறை நான் சாதி பார்க்கக் கூடாது என்பதைப்பற்றி மிக அருமையாகப் பேசினேன். சாதி வேறுபாடுகளை அறவே வெறுக்கிறோம். அது, இது என்று என்னமாய் விளாசினேன் தெரியுமா? (அண்ணா 25—7—77) 'எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சாதிகளைப் பார்ப்பதில்லை அண்ணாவின் தம்பிகளைத்தான் நிறுத்துகிறோம்" என்று அறைகூவினேன்.

ஆனால் ஒரு வேண்டுகோள். அதே பேச்சில் இன்னும் ஐந்து வரி தள்ளிப் படிக்காதீர்கள். 'வன்னிய சமுதாயத்துக்கு பிரதிநிதியாக ஒருவர், யாதவர் சமுதாயத்துக்கு ஒருவர் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கிறார்கள்" என்றும் சொல்லியிருக்கின்றேன். இரண்டையும் நீங்கள் கண்டிப்பாக முடிச்சும் போடமாட்டீர்கள். உங்களுக்குத்தான் தெரியுமே நான் யாரென்று? இதுவரை என்னைப் புரிந்து கொள்ளாமல் இருந்திருந்தால் இப்பொழுதாவது புரிந்துகொண்டிருப்பீர்கள், அதற்காக என்னைத் தயவு செய்து பாராட்டாதீர்கள். அதெல்லாம் என் பொது மக்களைத்தான் சேர வேண்டும். என்னை நம்பி, எங்களை கோட்டையிலே கொண்டு வந்துவிட்டு, தமிழகத்தைக் கோட்டை விட்ட அந்த மக்களின் கேட்டை எண்ணிப்பாராட்டுங்கள். என்னவோ தமிழ் நாடு எங்களுக்கு நல்ல வேட்டைதான் இப்போது பிறகு எப்படியோ!

- வீரசோழன் -

முதல்வரின் 'மனோரஞ்சித'மான தமிழ்ப்பற்று பாரீர்!

முதலமைச்சர் எம் ஜி. ஆருக்கு இப்போது திடீரென்று 'தமிழ்ப்பற்று' வந்திருக்கிறது.

மே நாள் விழாவில் பேசுகையில் அவர், கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது ஆங்கிலத்தில் கையெழுத்திட்டிருப்பதாகக் கூறி இப்படிச் செய்யலாமா என்று கேட்டிருக்கிறார்.

ஏதோ கலைஞருக்குத் தமிழ்ப்பற்றே இல்லாததுபோலவும், இவர்தான் தமிழ்ப் பற்று மிக்க 'அசல் தமிழர்' போலவும் பேசியிருக்கிறார்.

ஆங்கிலத்தில் குறிப்பெழுதப்பட்ட கோப்பிலே மட்டுமே தாம் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டிருப்பதாகவும், பேரறிஞர் அண்ணாகூட இப்படி ஆங்கிலக் குறிப்பெழுதப்பட்ட கோப்புகளில் ஆங்கிலத்திலேயே கையெழுத்திட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியும் தலைவர்கலைஞர் அவர்கள் எம்.ஜி.ஆருக்குப் பதிலளித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல; 'இனித் தமிழிலேயே குறிப்பெழுத வேண்டும்' என்று அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டுத் தாம் எழுதியிருப்பதையும் கலைஞர் சுட்டிக் காட்டியிருக்கிறார். போயும் போயும் கலைஞரின் தமிழ்ப்பற்றையா ஐயுறுவது? அதுவும் எம். ஜி. ஆரா கலைஞருக்குத் தமிழ்ப் பற்றில்லை என்று கூறுவது?

அவர் கூற்றைப் படிக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது!

கலைஞர் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டதாகக் குறிப்பிட்டுப் பேசிய அதே கூட்டத்தில், எம். ஜி ஆர். தனக்கிருக்கும் தமிழ்ப்பற்று எப்படிப்பட்டது என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எப்படி தெரியுமா?

அந்தக் கூட்டத்தில் பல குழந்தைகளுக்குப் பெயர் சூட்டியிருக்கிறார். அவரால் சூட்டப்பட்ட பெயர்களில் ஒன்று 'மனோரஞ்சிதம்' என்பதாகும்!

பார்த்தீர்களா அவருடைய தமிழ்ப்பற்றை!

அண்ணாவோ, கலைஞரோ குழந்தைக்குப் பெயர் சூட்டுவதென்றால் தமிழ்ப் பெயராகத்தான் சூட்டுவார்கள்.

எம். ஜி. ஆருக்கு அது எப்படி முடியும்? அவருக்கு எது தமிழ்ச் சொல் எது வடமொழிச் சொல் என்பதே புரியாதே! புரிந்திருந்தால் 'மனோரஞ்சிதம்' என்னும் வடமொழிப் பெயரைச் சூட்டுவாரா?

'அமரர் அண்ணா நாமம் வாழ்க' என்று சொல்லிக் கொண்டிருக்கும் அவருக்கு எப்படித் தமிழ்—வடமொழி வேறுபாடு தெரியும்?

வளையல் வாங்கலையோ

"ஏம்மா பத்திரிகையும் கையுமா இருக்கிறீயே; மூஞ்சி கீஞ்சி கழுவிப் பவுடர் கிவுடர் போடக்கூடாது!'

"அம்மா — எனக்கு மெருகு ஒன்றும் தேவையில்லை."

"தங்கப் பாத்திரமா இருந்தாலும், மெருகு இருந்தாதாண்டி மவுசா விலைபோகும்!"

"என்னை விலைபோகும் பொருளாகவே ஆக்கிவிட்டீர்களா?"

"அந்தக் கேள்வியெல்லாம்...... அதோ நடராசன் வர்றான்... ...அவனைக் கேளு!"

"என்னம்மா தங்கச்சி சொல்லுது?"

"பொட்டுக் கட்டிக்க மாட்டேங்குது!'

"பழைய பல்லவியைத்தானே பாடுது!"

" அனுபல்லவி பாடினாலும் அதைத்தான் பாடுவேன் அண்ணா!'

"சரணம்கூடப் பாடுவாள் சண்டிக் கழுதை; லட்சுமீ..... நம்ப குடும்பம் நல்லா இருக்கணும்னா....."

'நான் நாசமாய்ப் போகணும் —அதுதானே அம்மா!'

"தங்கச்சி...ஜமீன்தார் தங்கம் தங்கமாகக் கொட்டுவார்; நம்ப திடபுடலா வாழலாம்!"

"அண்ணா - உங்கள் விநோத வாழ்வுக்காக நான் விபசாரியாக வேண்டுமா?"

"வக்கணை பேசாதே; இப்படிப் பேசத்தான் உன்னை வளர்த்தேனாக்கும்?"

"ஆடு மாடுகளைக் கூடத்தான் ...நல்ல விலை போகுமென்று ...வளர்க்கிறார்கள்!"

"லட்சுமி...இந்தப் பாரு; நீ வைரக்கண்ணை நினைச்சு வம்பு பண்றே; இனி அந்த வறட்டுப் பயல் இந்த ஊர் திரும்ப மாட்டான்; வந்தால்...... ஜமீன்தார் அவன் காலை வாங்கிவிடுவார்; பேசாமல் ......எங்க அபிப்பிராயப்படி நட!"

"அண்ணா! நான் தாசி...... உன் தங்கை தாசி...ஐயோ... இந்த வார்த்தை உனக்கு நஞ்சாகத் தெரியவில்லையா?"

"நஞ்சாவது பஞ்சாவது? தெரியாமத்தான் நம்ப பெரியவாள் காலத்திலேயிருந்து நடக்குதா?"

"பெரியவர்கள் .....பெண் உலகத்தின் பரம எதிரிகள்! பாவிகள்! பாம்புக் கூட்டங்கள்!"

"துள்ளாதே லட்சுமீ; நாளை மறுநாள் நம் வீட்டுக்கு ஜமீன்தார் வருகிறார்; ஏதாவது தகராறு பண்ணினால்... நம் தலையே போய்விடும்!"

"ஏண்டா தம்பி நடராசா— பொட்டுக் கட்டிக் கல்யாணம் முடியறதுக்குள்ளே ஜமீன்தார் வருவதாடா?

"போ, அம்மா...உன் பழைய சாஸ்திரத்தைக் குப்பையில் போடு; பொட்டு அப்புறம் கட்டிக்கலாம்; முதலில் துட்டு வரட்டும்!'

நடராசன், தன் கலைந்துபோன தலையை ஒழுங்குபடுத்திக் கொள்ள நிலைக் கண்ணாடிக்கு முன் சென்றான்.

விம்மி விம்மி அழுதபடி லட்சுமி அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள்; அவளது அதரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன! நடுங்கும் அதரங்கள் 'வைரக்கண்ணு' என்று ஒரு வார்த்தையை வெளியே நீட்டி மீண்டும் மூடிக் கொண்டன!

* * *

வைரக்கண்ணு தலையங்கத்தை எழுதி முடித்தான்; தலையங்கத்தின் கடைசிப் பகுதிகளை இரண்டு முறை படித்துப் பார்த்தான் —

சமுதாயம்...நல்ல சமுதாயம்... கேடுகெட்ட சமுதாயம்...உள்ளமறியா உதவாக்கரைகள் உலவும் உளுத்த சமுதாயம்......"

அதை அப்படியே மடக்கி வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தான்.

"பத்திராகாசிரியராம், பத்திரிகாசிரியர்; வாங்கிய கடனை வட்டியும் முதலுமா நாளைக்குக் கீழே வைக்காவிட்டால் தம்பி.....தம்பி என்னானும் ஜாக்கிரதை'

வைரக்கண்ணுவின் நெஞ்சிலே இந்தக் காரசாரமான எச்சரிக்கை இடியென முழங்கிக் கொண்டிருந்தது! பத்திரிகை நடத்துவதற்காக அரிய நாயக முதலியாரிடம் வாங்கிய கடன் ஐநூறு ரூபாய் திருப்பித் தரப்படாததால் ஏற்பட்ட அபாய அறிவிப்பு இது!

நீண்ட மௌனத்திற்குப் பிறகு நீளமான ஒரு பெருமூச்சு. அவன் கண்கள் குளமாகிக் கன்னத்தில் இரண்டு நீர்த்துளிகள் தொத்திக்கொண்டிருந்தன!

மேசையில் கிடந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்தான்; அந்தக் கடிதத்தின் மடிப்புகள் கிழிந்திருந்தன, அத்தனை முறை அதைப் படித்திருக்கிறான் போலும்!

"அன்புள்ள அத்தான். விரைவில் சந்திப்போம்.'

'விரைவில் சந்திப்போம்' என்ற முடிவு, அன்புள்ள அத்தானை விட அதிக இனிப்பு வாய்ந்தது என்பதை அவன் இதழ்களின் அசைவு சொல்லிற்று! கன்னத்தில் நின்ற நீர்த்துளிகள் காய்ந்து விட்டன!

'அத்தான் என்ற ஓர் அழைப்பு குயில் கூப்பிட்டது போல இருந்தது.

வைரக்கண்ணு திடுக்கிட்டு எழுந்தான்; அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது

'லட்சுமி ...'

'அத்தான்'

இந்த இதய ஒலிகள் பீறிட்டெழுந்து பின்னிக் கொண்டன: அமைதி அதிக நேரம் நீடிக்கவில்லை!

"நேற்றுதானே கடிதம் எழுதியிருக்கிறாய் அதற்குள் எப்படி லட்சுமி வந்தாய்?'

"பெரிய ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறேன்... கேளுங்கள்; அம்மாவின் ஆசைப்படி... நடராச அண்ணாவின் அழைப்பை ஏற்று என்னை முதல் திருமணம் செய்து கொள்ள ஜமீன்தார் வந்தார், நான் பலாத்காரமாக அறைக்குள் தள்ளப் பட்டேன்..."

"ஆ..."

"கேளுங்கள்; ஜமீன்தாரிடம் எவ்வளவோ மன்றாடிப்பார்த்தேன். என் உபதேசங்கள் எல்லாம் அவருக்கு ஊமையின் பேச்சாகத் தெரிந்தன. என் வாழ்வில் நஞ்சு பூச வேண்டாமென்ற கோரிக்கையை... அந்த நேரத்தில் அவர் எப்படிக் கேட்பார்? துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தினார்; நான் சாகசத்தில் இறங்கினேன் மதுபான வகையறுக்கள் அத்தனையும் ஜமீந்தார் வயிற்றில் கலந்தன, என் கைகளால் அவைகளை வாங்கிக் குடிப்பதே பெரும் பாக்கியமென்று அவர் எண்ணினார். கோப்பையை வாங்க அவர் கை நடுங்கியபோது, நானே அவர் வாயில் ஊற்றினேன். அவ்வளவுதான் ஜமீன்தார் போதை தலைக்கேறிச் சாய்ந்தார்.

"பிறகு'

"நான் விழித்துக்கொண்டே இருந்தேன்; விடியற்காலை மணி நாலு; வீட்டில் நல்ல தூக்கம்; இருட்டிலே ஒளிந்து வந்து இரயில் ஏறினேன்;இப்பொழுது..."

கருணாநிதி

"லட்சுமி...வீரலட்சுமி...'

"அத்தான் ... இந்த வைர வளையல்கள் ஜமீன்தார் கொடுத்தவை!"

"பாவம் — பரிதாபத்துக்குரியவன்; நன்றாக ஏமாந்தான்!'

"அத்தான்... இன்றுமுதல் நம் வாழ்க்கை ஆரம்பம்!"

"ஆம்"

"இனி நாம் பிரிய வேண்டியதில்லை'

"இல்லை!"

"அத்தான்... ஏன் அழுகிறீர்கள்?"

"அழவில்லை...ஆனந்தக் கண்ணீர்!'

"நான் நம்பமாட்டேன்....., நடந்ததைச் சொல்லுங்கள்"

வைரக்கண்ணு வாய்திறக்கவேயில்லை; லட்சுமியின் இடைவிடாத பிடிவாதத்தால்— கடையில் தான் பட்ட கடனுக்காக நாளை கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற உண்மை வெளியாயிற்று; லட்சுமி கவலைப்படவேயில்லை ஜாமீன்தார் போட்ட வளையல்களைக் கழற்றினாள்; தன் கழுத்தில் கிடந்த சிறிய சங்கிலியையும் — வளையல்களையும் வைரக் கண்ணுவிடம் அளித்தாள்.

'அத்தான் — இவைகளை நாளைக்கே விற்றுவிடுங்கள்; கடன் தீரட்டும்; மீதிப்பணம் பத்திரிகைக்கு முதலாக இருக்கட்டும்; நீங்கள் தயங்க வேண்டாம்.

வைரக்கண்ணு யோசித்தான். ஆனாலும் சரி என்றான்; இரவு ஓடிக்கொண்டிருந்தது!

* * *

வளையல்களை எடுத்துக் கொண்டு வைரக்கண்ணு புறப்பட்டான். வாயிற்படி வரையில் லட்சுமி வந்து வழியனுப்பினாள்; அவள் கண்களில் புது ஒளி! இதழைக் கிழித்துக்கொண்டு புன்னகை நெளிந்தது!

அவள் நிச்சயிலே வைரக்கண்ணுவின் வீட்டில் இருப்பதாக நினைக்கவில்லை...இன்பபுரியில் இருப்பதாக நினைத்தாள், ஓர் அனாதைச் சிறுவனின் மேல் அவள் கொண்ட காதல் ஜமீன்தார் கட்டிய மாட மாளிகைகளையெல்லாம் மண்மேடாக மதித்தது. அவன் மீது கொண்ட காதலுக்காக அவள் பட்ட இன்னல்கள் எத்தனை!

வைரக்கண்ணு விரட்டப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டாள் — அது, விலாவில் பாய்ந்த வேல்!

காதலில் கொண்டிருந்த உறுதியால் அவள் களைக்கவில்லை!

நடராசனின் நாட்டுச் சோக்காளி வாழ்வுக்குத் தன் வாழ்வு பலியிடப்படவேண்டுமென்ற பலாத்காரம் ...இது எரியும் தீயில் எண்ணெய்!

அவள் விடுதலை விழா அன்று— அதை நினைத்து மகிழ்ந்தாள்; ஆடிக்கொண்டே உள்ளே ஓடினாள்; குயிலிசை கிளம்பிற்று!

* * *

வடநாட்டு மார்வாடியின் காசுக் கடையில் வைர வளையல்கள் சோதனை செய்யப்பட்டு, விலை பேசும் கட்டம் வந்தது!

"வைரம்உயர்ந்ததல்ல...சாதாரண வைரங்கள்' எல்லாம் நூறு ரூபாய் கூடப் பெறுமானமில்லை — மார்வாடி அலட்சியமாகக் கீழே வைத்தான்

வைரக் கண்ணு வளையல்களை எடுத்துக்கொண்டு, "கண்ணை திறந்து கேளப்பா' என்றான்.

"போனால் போகிறது' நாற்றைம்பது வாங்கிக்கொள்' ... இது மார்வாடி!

"பாவம் ஐயாவுக்குப் பரிதாபம்" வைரக் கண்ணு கிண்டலாகப் பேசினான்.

"ஒரே விலை — இருநூறு ரூபாய்!'

"தமிழ்நாட்டுக் காரனுக்குப் புத்தியே இல்லை என்பது ஐயாவின் அபிப்பிராயம்"— வைரக் கண்ணு ஆத்திரத்தோடுதான் இதைக் கூறினான்.

"சரி கோபிக்காதே சார்; மறுபடியும் பார்க்கிறேன்'

மார்வாடி வளையல்களை வாங்கி மீண்டும் மதிப்புப் பார்த்தான்; பார்த்துக்கொண்டிருக்கும்போதே தன் கடைப் பையனிடம் ஏதோ இந்துஸ்தானியில்சொன்னான்; கடைப் பையன் எங்கேயோ ஓடினான்; திருப்பித் திருப்பி வளையல்களைப் பார்த்துக் கொண்டே இருந்தான்; வைரக் கண்ணுக்கு அலுத்து விட்டது

"சீக்கிரம் பாரய்யா!"

"இதோ முடிந்துவிடும்!'

"எவ்வளவு நாழிகை மதிப்புப் பார்க்க?'

"பையன் போயிருக்கிறான் வரட்டும் ... உங்களை அனுப்பி விடுகிறேன்"

கடைப் பையன் திரும்பினான் அவனைத் தொடர்ந்து சப— இன்ஸ்பெக்டரும் வந்துசேர்ந்தார்.

வைரக்கண்ணு... நகைகளைத் திருடி வந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்.

"உங்க பெயர் வைரக் கண்ணு தானே?"

"ஆமாம்"

"பாட்டாளி" பத்திரிகை எடிட்டர் நீர்தானே?

"ஆமாம்"

"இது யாருடைய நகைகள்?'

"என் மனைவியின் நகைகள்"

"முன்பு ஒரு முறை உமக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று என்னிடம் சொன்னீரே?"

"மனைவியல்ல — என் காதலி; அவள் விருப்பத்தின்படி தான் இவைகளை விற்க வந்தேன்"

'உம் காதலி... இப்போது எங்கே?

"என் வீட்டில் இருக்கிறாள்"

"சரி... வீட்டுக்குப் புறப்படும்"

"இதோ... வருகிறேன்"

சப் இன்ஸ்பெக்டரும் வைரக் கண்ணும்...வேடிக்கை பார்த்தவர்களும் அவன் வீடு நோக்கி நடந்தார்கள்.

வீடு நெருங்க நெருங்க வைரக் கண்ணுக்குச் சிரிப்பு வெடிக்க ஆரம்பித்தது, சப்—இன்ஸ்பெக்டர்சரியான படி ஏமாறப்போகிறார் என்று அவன் மனதில் ஏளன எண்ணம் தோன்றிற்று!

வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

'லட்சுமி' என்று வைரக்கண்ணு ஆவலோடு கூப்பிட்டான். பதில் வரவில்லை ஒரு மூலையில் அவள் படுத்திருந்தாள்: பகலிலா தூக்கம்— அவளைத் தட்டி எழுப்பினான்; இன்ஸ்பெக்டருக்குச் சந்தேகம் தீர்ந்தது;

திடீரென வைரக்கண்ணு அலறினான் — முகத்தில் அறைந்து கொண்டான்.

அவள் முகமெல்லாம் இரத்தக் கறை, பைத்தியம் பிடித்தவன் போல் ஆனான்.

எல்லோரும் உள்ளே நுழைந்தார்கள். லட்சுமி பிணமாகக் கிடந்தாள், வைரக்கண்ணு கைது செய்யப்பட்டான்.

"திருடன்... கொலைகாரன்..." சப்-இன்ஸ்பெக்டரின் சண்டமாருத ஒலிகள்!

"பாவிப்பயல்; அழகான பெண்ணை நகைகளுக்காகக் கொலை செய்திருக்கிறாயா?"

வேடிக்கை பார்த்தவர்கள் கூறினார்கள் இப்படி!

தாசித் தொழிலுக்கு ஒத்து வராத தங்கை, தன்னையும் — ஜமீன்தாரையும் ஏமாற்றிவிட்டு... ஒரு அனாதைப் பயலோடு வாழ்வது பிடிக்காத நடராசன், ஓடி வந்தவளைக் கண்டுபிடித்துக் கூப்பிட்டுப் பார்த்தும் வராததால் குட்டுக் கொன்றுவிட்டுப் போய்விட்டான் — என்ற இரகசியம் யாருக்கும் தெரியாது!

வைரக்கண்ணு வழக்குமன்றத்தில் நிறுத்தப்பட்டான்! அவன்பழைய வைரக்கண்ணு அல்ல — பைத்தியக்கார வைரக்கண்ணு!

வக்கீல் எதுகேட்டாலும் 'வளையல் வாங்கலையோ வளையல்' என்ற பதிலைத்தான் சொல்லுகிறான்!



சட்டம் அவமதிக்கப்படுவதை ஜனதா அரசு உணருமா?

அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்றைக்கு வெளிவந்ததோ அன்றைக்கே சட்டம் சாக்காட்டை நோக்கி நடைபோடும் நிலைக்கு நோய் வாய்ப்பட்டுவிட்டது.

சட்டத்தின் பாதுகாவலராக இருக்க வேண்டியவர்கள் தம் நிலையை மறந்து சட்டத்தைத் துச்சமென மதிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்திரா காந்தியிலிருந்து அப்போதைக்கு இடறிவிழுந்த இந்திரா காங்கிரசின் கடைசிப் பாமரத் தொண்டன்வரை சட்டத்தையே அலசு அலசு என்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். பொது மேடைகளிலே பட்டவர்த்தனமாக தீர்ப்புப்பற்றியும் வழங்கிய நீதிபதி அவர்களைப்பற்றியும் மிக மிக மட்டமாக விமர்சித்துக் கொண்டிருந்தார்கள்

இடையிலே பல நாட்கள் உருண்டோடி விட்டன. இந்திராவுக்கு வந்த நெருக்கடியை தரணிக்கே வந்ததாகப் புனைந்துரைத்து நாட்டுக்கே நெருக்கடி நிலை அமுல்படுத்தப் பட்டது. எத்தனை அத்துமீறல்கள் நடைபெற்றன! அதிகாரிகளின் அட்டகாசம் அன்றாடச் செய்திகளாக மலர்ந்து கொண்டிருந்தது. பெரும் பெரும் தலைவர்களெல்லாம் சிறையிலடைக்கப்பட்டிருந்தார்கள். காவல் நிலையத்திலுள்ள காவல் அதிகாரிகள் சிறைவாயில் என்ற வேலியைத் திறந்து கொண்டு தலைவர்களையும் தொண்டர்களையும்மேய்க்கின்றதிருட்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

தலைமையமைச்சரான இந்திரா காந்திக்கு வந்த நெருக்கடி சமாளிக்கப்பட்டது. சாமியாரின் அனுக்கிரகம் பிரபலமாகிக் கொண்டிருந்தது. யாரைக் கேட்டாலும் நான் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவன்தான் என்று கேட்பவர் தலையலடித்துச் சத்தியம் செய்து கொண்டிருந்தார்கள். தனக்கு ஆதரவு பெருகுவதைக் கண்ணாரக் கண்ட இந்திரா மனம் குளிர்ந்தார். நெருக்கடிநிலை தளர்ந்தது. எப்படியும் வென்று விடுவோம் என்று தேர்தலுக்த ஆணையிட்டார். தீர இந்திரா திக்விஜயம் தொடங்கினர்.

நன்றிகெட்ட மக்கள் இந்திராவை நடுத் தெருவிலே நிற்க அன்று முளைத்தஜனதா கட்சியினரை நாடாள வைத்துவிட்டார்கள்.

இந்திரா ஒரு விசாரணைக் கமிஷனைத்தான் போட்டார். நன்றியுள்ள சர்க்காரியா சுருண்டிருந்த வாலை எந்த அளவுக்கு நீட்டி எப்படிக் குழைக்க முடியுமோ அப்படிக் குழைத்துவிட்டார்.

தன்னை எதிர்த்தவர்கள் என்பதற்காகத்தலைவர்களைஞர் மீது விசாரணைக் கமிஷன் பெர்னண்டஸ் பாதல் போன்றவர்கள் மீது வழக்கு.

முடிவு என்ன ஆயிற்று? விசாரணைக் கமிஷன் போட்ட இந்திரா மீதே விசாரணைக் கமிஷன்.

கமிஷன் எத்தனைக் கமிஷனய்யா! எத்தனை வழக்குகள்! இவை இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

இந்திரா, சஞ்சய் காந்தி. தீரேந்திரப் பிரம்மச்சாரி, பன்சிலால் போன்றவர்கள் மீதெல்லாம் விசாரணைக் கமிஷன்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தலைமை நீதிமன்ற நடுவர் அந்தஸ்து பெற்றவர்கள் வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கேதான் சட்டம் உரை போட்டுப் பார்க்கப்படுகிறது.

இந்திரா முதலில் நீதிமன்றத்துக்கே வரவில்லை. பிறகு

மல்லை சீவ நடராசன்

பிரமாண வாக்குமூலம் தர மறுத்துவிட்டார்.

தலைவியின் வழியைப் பின்பற்றியே மற்றவர்களும் இருந்தார்கள். சஞ்சய், பிரம்மச்சாரி. பிரணாப்குமார் முகர்ஜி, பஸ்சிலால் போன்றோர் முதலில் நீதிமன்றத்துக்கே வர மறுத்தார்கள். பின்னாலே வந்தார்கள். வாக்குமூலம் தர மறுத்தார்கள். கமிஷனை அவமதித்த வழக்கு வேறு நீதிமன்றத்தில் நீதிபதி ஷாவே தொடுத்திருக்கிறார்.

இடையிடையே சில சில செய்திகளும் ஏடுகளிலே வந்து கொண்டிருக்கின்றன.

விசாரணை மண்டபத்துக்குள்ளே வாழ்க ஒழிக கோஷங்கள்! குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்குட்பட்டவரே தன்னுடைய ஆதரவாளர்களைக் கொண்டு கூச்சலும் குழப்பமும் விளைவித்தல் போன்ற நடைமுறைகள் வழக்கமாகிவிட்டிருக்கின்றன.

நடந்து கொண்ட முறைகளிலிருந்தும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் உண்மைகள் தெளிவாகிக் கொண்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் ஆண்டு கொண்டிருந்தபோது சட்டத்தைக் கைப்பொம்மையாக எண்ணிச் செயல்பட்ட அந்த ஆதிக்கவர்க்கம் மூக்கறுபட்டுக் காதறுப்பட்டு மூலையிலே முக்காடிட்டு அமர்ந்திருக்குப்போதும் சட்டத்தை விளையாட்டுப்பொம்மையாகக் கருதிக் கொண்டிருக்கிறது.

சட்டம் அவமதிக்கப்படுகிறது. சின்னாபின்னப்படுத்தப்பட்டு உருக்குலைக்கப்படுகிறது. இதை ஜன்தா அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இதை வைத்துத்தான் ஜனதா அரசின் மந்தமான போக்கை வைத்துத்தான் இந்திரா, ஜனதா தலைவர்களைப் பார்த்து சூடு சொரணையற்றவர்கள் என்று பகிரங்கமாகப் பொதுமேடையிலே பேசியிருக்கிறார்.

இந்திராவின் கூற்று உண்மைதான் என்று ஆமோதிக்கத்தக்க வகையில் ஜனதா தலைவர்கள் பேசாமடந்தைகளாகிவிட்டிருக்கிறார்கள்.

ஜனதாவின் பலவீனம் நாளுக்குநாள் வலுவடைந்து கொண்டு வருகிறது.

உட்கட்சிப் பூசலை முச்சந்தியிலே போட்டு முழ்கடிக்கப் பார்க்கிறார்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் நேரடியாகவே குற்றம் சாட்டுகிறார்கள்.

அங்கிங்கெனாதபடி மாநிலந்தோறும் இதே கெடுபிடிதான்.

இவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் வாலறுந்த பட்டம்போல அந்தரத்திலே வட்டமடித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு அன்றைய இளவரசர் முடிதுறந்த பின்னாலும் இளவரசர் என்ற நினைப்பிலேயே நடந்து கொள்கிறார். அந்தச் செல்லாத நோட்டுக்கு இங்கேயுள்ள சில்லறைகள் பஜகோவிந்தம் பாடிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையிலே தலைமை நீதிமன்ற நடுவர் எந்த நொடியிலும் சட்டம் அவமதிக்கப்பட்டது என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் கமிஷனை செல்லாது என்கிறார்கள்.

செல்வாக்கையும் அந்தஸ்தையும் பறிகொடுத்தவர் தன்னால் இழைக்கப்பட்ட தவறுகளுக்குப் பொது மேடையிலே வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டவர். இவரது சகாக்கள் அத்தனை பேருமே ஒட்டு மொத்தமாகத் தாம் பார்த்த முயலுக்கு மூன்றே கால்கள் தான் என்பதுபோல அடாவடித்தனமாக கமிஷனே செல்லாது அதற்கு அதிகாரமேயில்லை என்றெல்லாம் கமிஷன் முன்னாலேயே பேசுகிறார்கள்.

உட்கட்சிப் பூசலிலே ஒரு செய்தி. தலைமை அமைச்சரின் புதல்வர் காந்தி தேசாய்மீது மீது விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று.

அவர்கள் கமிஷன் செல்லாது என்கிறார்கள். மேலும் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டால் ஜனதாக்காரர்கள் குறிப்பாககாந்திதேசாயே இந்தக் கமிஷனை எப்படி அமைக்கலாம் என்று கேட்கிறாரோ என்னவோ?

முன்போல ஒற்றுமையிருந்திருந்தால் ஜார்ஜ் பெர்னண்டஸ் — பாதல் போன்றவர்களின் வழக்கை நாடாளுமன்றத்தில் வைத்துத் திரும்பப் பெற்றார்களே அதைப்போல இதுவும் நியமிக்கப்பட்டால் இதையும் திரும்பப் பெறுவார்களோ என்னவோ?

ஒருதலை என்ற பேச்சுக்கே இடமின்றி நடுநிலை வகித்து சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் இல்லாமல் பாதுகாப்பளித்து விசாரிக்கும் ஷா கமிஷனுக்கு இந்த நிலை.

குற்றங்கள் என்னென்ன அவைகள்எப்படி யார்யாரால் இழைக்கப்பட்டன. இவர்களைத் தூண்டிவிட்டவர்கள் யார் என்றெல்லாம் துல்லியமாக ஆராய்ந்து அறிக்கை தந்நார் ஜஸ்டிஸ் இஸ்மாயில். அதன் மீது இதுவரையிலும் நடவடிக்கைகளைக் காணோம்.

இந்திரா சர்க்காரால் நியமிக்கப்பட்டது சர்க்காரியா கமிஷன். இந்தச் சர்க்காரியா அசல் சர்க்கார் ஆளாகவே இருந்து எப்படியும் கலைஞரைக் குற்றவாளியாக்கிவிடுவது என்று முயன்று தோற்றிருக்கிறார். அவர் வெற்றி பெற்று அவரது எசமானர்களும்வெற்றி பெற்றிருந்தால் நிலைமையே வேறுமாதிரியிருந்திருக்கும்.

கமிஷன்கள் பலவிதம். சட்டம் ஒன்றுதானே. அதை அவமதிப்பது குற்றந்தானே. தெரிந்தும்நடவடிக்கையெடுக்காமல் இருப்பவர்களைப் பார்த்து சூடு சொரணையற்றவர்கள் என்று சொன்னால் சொன்னவர்கள் மீது பாய்வதும் குற்றந்தானே! ஜனதா உணருமா?

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்

எஸ். காளிமுத்து

R.M.P. (IND. V. V. C. A. I. H.)

பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும் சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.

போன்: 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

உதயசூரியன் மோதிரம்

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பல்லாயிரக்கணக்கான இயக்க தோழர்களின் கரங்களில் கணையாழியாக திகழ்ந்த உதய சூரியன் மோதிரத்தை பேரறிஞர் அண்ணாவும், தமிழகத் தலைவர் கலைஞரும் கண்டு பூரிப்பு அடைந்தார்கள். மீண்டும் அந்தவெற்றிச் சின்னம் உதய சூரியன் மோதிரத்தை முழுதும் பஞ்சலோகத்தால் தாயரித்து 'வாழ்க கலைஞர்' என்று பொறித்து தருகிறோம். ஒரு மோதிரம் விலை ரூ. 15·00 தபால் செலவு 3-50 தனி. உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து ரூ. 3.00 அட்வான்சுடன் அனுப்பினால் மீதித் தொகைக்கு மோதிரத்தை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

சக்தி ஜி. சம்பந்தன்
42, பள்ளிக் கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600072

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் சென்றும் மோதிரத்தை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டோ வினஸ்,
104, C. N. K. ரோட் - சென்னை-5.
CINEMA SLIDE, OUTDOOR FLASH PHOTOS ETC.

★★★★★-★★★★★★

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

புதிய சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு,
அன்பகம், சென்னை-600018

★★★★★★★-★★★★

அவர் நடிக்கப்போகட்டும்!

அவர் நடிக்கப் போய்விட்டார்—

எதற்காக அங்கலாய்க்கிருய் தமிழ் நாடே!

அவருக்கு எது தெரியுமோ—அதைச் செய்கிருர்,

அவருக்குப் 'பவுடர்'தான் தெரியும்—பட்ஜட் தெரியாது!

அவருக்குக் 'கிரேன் ஷாட்' தெரியும்—'கட்மோஷன்' தெரியாது!

அவருக்குப் ''பிராம்ட்'' தெரியும்—'பிரிவிலேஜ் மோஷன்' தெரியாது!

அவருக்கு 'அவுட் டோர் ஷூட்டிங்' தெரியும்—'அட்மினிஸ்டிரேஷன்' தெரியாது!

அவருக்குத் தெரியாத ஒன்றைச் 'செய்' என்ருல் எப்படிச் செய்வார்?

அவருக்கு நடக்கத் தெரியும் நடக்கிருர்—

பேசத் தெரியும்—பேசுகிருர்!

பார்க்கத் தெரியும்—பார்க்கிருர்!

கேட்கத் தெரியும்—கேட்கிருர்!

நுகரத் தெரியும்—நுகர்கிருர்!

ஆகவே, அவருக்குத் தெரிந்ததைத் தான் செய்கிருர்!

பகலில் முதலமைச்சர்!

இரவில் நடிகர்!

இதை ஓர் அதிர்ச்சியாகத் தமிழ் நாடு நினைக்கக்கூடாது என்று அண்ணு நமக்கு அறிவுரை கூறவில்லையா?

''பகலில் பாமரர்க்கு இதோபதேசம்; இரவில் இன்பவல்லியுடன் சரசம், சுந்தர கோஷ்! உமது சூது கோர்ட்டாருக்குத் தெரியாது.''

இது 'வேலைக்காரி'யில் நம் அண்ணு எழுதிய உரையாடல்.

உரையாடலா—இல்லை, எழுபத்தெட்டாம் ஆண்டில் நடக்கின்ற அரசியலையெண்ணி முன் கூட்டியே சொன்ன 'தீர்க்கத் தரிசனம்'.

எம்.ஜி.ஆர். போன்றவர்களை, பகலை வைத்து எடை போடக்கூடாது!

இரவில்தான் இவர்கள் 'உற்பத்தி' ஆகிருர்கள்!

மனித இனம் தூங்கும்போதுதான் காடுகள் கலகலப்பாக இருக்கின்றன;

இருட்டும், தனி அறையும் இந்த மனிதர்களுக்குக் கிடைத்த வசந்தகால வாய்ப்புகள்!

வெளிச்சத்தை வெறுக்கின்ற கரப்பான் பூச்சிகள் அரசியல் பிழம்புகளை அருவருப்போடுதான் பார்க்கும்.

நடிக்கத்தான் போகட்டுமே! அதனுல் என்ன?

எட்டு மாத காலமாக சட்டமன்றத்தில் நடித்துப் பார்த்தார்—வேகவில்லை—வெளியேறிவிட்டார்.

சட்டமன்றத்தின் மங்கலான ஒளியில் இதற்கு முன் இருந்த முதல்வர்கள் தங்கள் அறிவொளியை இணைத்தனர்.

இவரால் அது முடியவில்லை—இவரின் கீறல் வீழ்ந்த கீர்த்தியும்—விரிசல்விட்ட சிந்தனையும்—உடைந்து போன உத்தியும்—சறுக்கி வீழ்ந்த ஞானமும்—விலை போகவில்லை!

சபை நடுவே குறிப்பறிய மாட்டாத நன்மரமாய் நிற்பதை விட—எழுதிக் கொடுத்த வசனத்தை எந்தக் காட்சியிலாவது உளறுவது எவ்வளவோ மேல் அல்லவா?

இவர் நடித்த 200 படங்களும், 50 ஆண்டுக்கால கலையுலக அனுபவமும்—இவரை முதலமைச்சராக்கிவிட்டன!

ஓட்டுகளால் உயரத்தில் வந்துவிட்டார்; அறிவால் 'அசெம்பளியில்' தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இருநூறு படங்களும் 50 ஆண்டுக்கால நடிப்பும் சட்டமன்றில் எட்டு மாத காலத்துக்குத்தான் வலிவை வழங்கின!

இவருடைய 'ஜெனரேட்டரின்' 'காயில் ஒயர்கள்' 'இன்சுலேஷனை' இழந்துவிட்டன!

தற்காலிக காந்த சக்தி (டெம்பரரி மேக்னட்) தன் ஜீவனை இழந்துவிட்டது.

மக்களின் பசியும், தேவையும், பிரச்சினைகளும், இவரின் கவர்ச்சியைச் செல்லரிக்கச் செய்துவிட்டன!

God too should come in the shape of bread — Then only the human being will worship the supreme being —

கடவுள்கூட உணவு வடிவத்தில் வந்தால்தான், மனிதன் கடவுளை வணங்குவான் என்று, ''பிரஞ்சுப் புரட்சி'' எழுதிய கார்லைல் கூறுகிருன்.

கடவுளுக்கே பசியின் முன்பு இவ்வளவுதான் தநதியென்ருல்,

-: கவிஞர் குடியரசு :-

''இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு''

என்று வள்ளுவர் கூறியபடி—நேற்று கொன்று தின்ற வறுமை இன்றும் வருகிறதே என்று குமுறி, புழுங்கிப் புழுப்போல் துடிக்கும் மக்கள் முன் நிழல் (சினிமா) நிஜமாக முடியவில்லை! கொட்டகையில் பெற்ற வைட்டமின் கோட்டைக்குப் போதவில்லை!

ஆகவே, அதனை ஈடுகட்ட மீண்டும் ஸ்டுடியோவுக்கு ஓடுகிருர்! காட்சிகளைக் காட்டிக் கட்டாந்தரையைக் கழனியாக்க முயல்கிருர்!

காமமும், மயக்கமும் அற்பாயுளின் அவதாரங்கள்!

அவைகளின்மேல் கட்டப் பெற்ற புகழும், செல்வாக்கும், நரம்புத் தளர்ச்சி ஏற்படுகிற நேரத்தில் ஆட்டங் காண்கின்றன.

இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சி, மக்களை ஓட்டாண்டியாக்கி இருக்கிறது!

வாங்கும் சக்தியை (Purchasing Power) இழந்த மக்கள், கொட்டகைக்குக் கொட்டி அழச்சக்தி அற்றவர்களாகப் போய்விட்டனர்.

இரண்டாவது சுதந்திரப் போரில் கலைஞர் வெற்றியடைந்தார். இவரோ இரண்டாவது கவர்ச்சிப் போரில் கலந்து கொள்ள ஓடுகிருர்!

அரசாங்க இயந்திரத்தைவிட சினிமா இயந்திரத்தில் துருப்பிடிக்காமல் இருக்க எண்ணெய் ஊற்றுகிருர்!

ஸ்தம்பித்துத் தேங்கி நிற்கும் தலைமைச் செயலகக் கோப்புகளை அனுதை இல்லங்களுக்கு அனுப்பிவிட்டு, பொழுது போக்குச் சாதனங்களைப் புலன் விசாரணை செய்கிருர்!

மார்வாடிக் கடையில் அடகுவைத்த ''தாலி''யை மீட்க முடியாத தாய்மார்களிடம் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனைக் காட்ட முனைகிருர்.

இதிலிருந்து தெரிவதென்ன?

நிர்வாகத்தைவிட ஊழல் நிமிர்ந்து நிற்கிறது! அவரின் போக்கை, பிற கட்சி அரசியல்வாதிகள் கண்டிக்கத் தயங்குகின்றனர்,

கலைஞரின் ஞானமும், துணிவும் அவர்களை மௌனத்தில் பூட்டுகின்றன!

எம். ஜி. ஆரை எதிர்த்தால் கலைஞர் எகிறி நின்றுவிட்டால் என்னுவது என்று மோனத்தில் மூழ்கி விடுகின்றன.

மக்களும், அரசியல் மரபும், வடிக்கும் கண்ணீரைக் கண்டு கொள்ளாமல் நழுவி நகர்கின்றனர்.

ஆனுலும் ஒரு சிலர் மெது மெது வாய் அறிக்கைகளைத் தோரணமாகக் கட்டுகின்றனர்!

ஆம்! இப்போதுதான் தாக்குப் பிடிக்காத நண்டுகள் தலைகாட்டுகின்றன.

திருவாரூர்த் தேருக்கு அவைகள் ஒப்பனைகளாக ஒளிவிடுகின்றன!

மக்களின் பசி, தேவை, பிரச்சினைகளின் மொத்தவடிவமே கலைஞர்தான்!

மேற்சொன்ன மூன்றுக்கும் வாதாடுபவன் எவனும் கலைஞர்க்காக வாதாடுபவன்தான்!

இந்த மூன்றும் கிளைவிட்டு எங்கே கிளர்ச்சியாக வெடித்துவிடுமோ என்று அஞ்சித்தான் ''சின்னவர்'' சினிமாவைப் பிடித்துத் தொங்குகிருர்!

''மனு'' அவரைக் காப்பாற்றவில்லை!

''சர்க்காரியா'' அவரைச் சறுக்கிவிட்டது!

''இஸ்மாயில்'' அவரை இடிக்கிருர்!

''வாக்குறுதிகள்'' வதங்கிவிட்டன!

''சட்டமன்றம் அவருக்குச் சனியனுகிவிட்டது!

''அவர் வாயே'' அவருக்கு வைரியாகிவிட்டது!

''நிர்வாகம்'' அவர் நரம்புத் தளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டது!

வேறு வழியில்லை திரையில் மறையப் பார்க்கிருர்!

உயிருக்குப் பயந்து ஓடும் ஒரு ஜீவனின் முகம் எப்படி வெளிறிப்போய் இருக்குமோ அப்படி முதலமைச்சர் முகம் இருக்கிறது!

ஆப்பசைத்தது உன் குற்றம்தான்

(10-ம் பக்கம் பார்க்க)

தடைக்கற்களைப் படிக்கற்களாக்குவோம்

முல்லைக் காடாம் முத்தமிழர் நாட்டின் எல்லைக்கோர் இமய வெற்பை எட்டிப் பிடித்த காலத்தில் எத்திக்கும் புகழ்மணக்க இருந்திட்ட பழம்பெருமை இனவெழுச்சியைத் தூண்டப் பயன்பட வேண்டும். ஈழத்தை ஆண்டிட்ட இனத்தில் இன்று கோழைத் தமிழர்களாய்க் குன்றி நிற்கும் கொத்தடிமை நினைப்பைப் பூண்டோடு விட்டொழித்தாகல் வேண்டும். கடல் தாண்டிக் கடாரம் கொண்டு தென் கிழக்காசியாவில் திராவிடக் கலைகளைப் பரப்பி வாழ்ந்த இனம் மூவேளைக் குடல்நிரப்பும் முயற்சிக்காக மண்டியிட்டு மாற்றுரிடம் அண்டிநிற்கும் அடிமை நிலையை ஒழித்தாக வேண்டும். சுயமரியாதைச் சுடரேந்தி இம் மண்ணின் மைந்தர்கள் தங்களைப் பிணித்த தளைகளை அறுக்கச் சூளேற்றுச் செயல்பட்டாகல் வேண்டும். வந்தேறிகளுக்கு வால்பிடிக்கும் கூட்டம் மனமாற்றம் பெற்ருக வேண்டும். இனம் ஏற்றம் பெறுதற்குத் தமிழினத்தார் ஓரணியில் திரண்டாக வேண்டும்.

பெரியாரும், பேரறிஞரும் அவர்தம் ஆற்றலைப் பெற்ற தனல் எட்டடி பாய்ந்த வேங்கைக்குத் தப்பாமல் பிறந்து பதினறு அடி பாயும் வேங்கையாகத் திகழும் வீரத் தலைவர் கலைஞரும் இன ஒற்றுமைக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் விழலுக்கிறைத்த நீராகிடுமோ என்ற அச்சம் மிச்சமாகியிருக்கிறது. எங்கிருந்தோ வந்தவனுக்கு ஏணியாகி அவன் இன்ப வாழ்வுக்குத் தோணியாகி தமிழரில் சிலர் தலைமீது வைத்துக் கூத்தாடும் கொடுமையால் இந்நேரம் முடிந்திருக்க வேண்டிய இன மேம்பாட்டு ஏற்பாடுகள் எந்நோம் நிறைவேறுமோ என்ற ஏக்கம் எழுந்து இருக்கின்றது.

அரையில் மட்டும் உடையோடு ஆடும் அழகியோடு படுகிழவன் நீராடும் கோலத்தைப் பார்த்து இளைஞர் பாலுணர்வு தூண்டப்பெற்று காசு பறிகொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. கொச்சை மொழியில் பச்சைப் பொருளோடு இசையோடு கலந்து தரப்படும் நஞ்சு எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தை என்னுக்குமோ என்ற கவலை எழுந்துள்ளது.

பகவானைப் பாடவேண்டியவர்கள் பாலகன் பாடும் பாட்டில்கூட சிற்றின்ப வெறியூட்டும் பாடல்களைப் பாடச் செய்வது இன்று திரைப் படங்களின் வாயிலாக நிகழ்ந்தேறுகிறது. மெத்தவும் கெடுத்துவரும் திரைப்படங்களில் முத்தக் காட்சிகளும் இடம்பெறத் தொடங்கிவிட்டால் இளைஞர்க்கு வேறெங்கும் பொழுதைப் போக்கும் நினைப்பு வராது.

கொட்டகைக்குள் அமர்ந்தபடி இந்தக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் குக்கிராமவாசியின் உள்ளத்திற்குள்ளும் இழிவுணர்வு குடைந்துகொண்டு சென்றிடுகின்றது. நடிகன் நாடாளவரமுடிந்த கட்டோடு தமிழ் நாட்டிலே ஒழுக்கம் என்ருல் என்ன விலை என்று கேட்கும் எதிர்காலம் உருவாக இருக்கிறது.

இத்தகு நெருக்கடியில் இனவெழுச்சி தடைப்பட்டுள்ள காலம் வந்துள்ளது. சட்டரீதியான நெருக்கடி நிலையென்று சட்டத்திற்குப் புறம்பாகத் திணிக்கப்பட்ட நெருக்கடி நிலை நீங்கிவிட்டாலும் தமிழ்ச் சமுதாயம் புதிய நெருக்கடி நிலையில் சிக்கியிருக்கிறது.

வெண்ணெய்க்கும் சுண்ணாம்பிற்கும் வேறுபாடு தெரியாத மயக்க நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டிருக்கின்றது.

எட்டிக்காய் இனிக்கும் என்றெண்ணி ஏமாறுவோராக எட்டப்பர்கள் பின்னுற் சிற்சில தமிழர் சென்றுகொண்டிருக்கின்றனர்.

கள்ளிப்பூவை விரும்பி முல்லைப் பூவை வாங்க மறுக்கும் கருத்துக் குருடர்களாய்க்காட்டிக் கொடுப்பான்களின் கவர்ச்சி அலையில் இழுக்கப்பட்டு இளந் தமிழர் சிலர் வழுக்கி நிற்கின்ருர்.

இந்தி மொழியாதிக்க வெறியர்களால் இன்பத்தமிழுக்கு அரை நூற்றுண்டாக ஏற்பட்ட நெருக்கடி நீங்கிய பாடில்லை. வடமொழிப் பற்றுளர் வையாபுரிக் கூட்டத்தார் தம் குழப்ப வாதங்கட்கு முற்றுப் புள்ளி வைத்து தனித் தமிழ்ப் பற்றுளரின் கை ஓங்கியபாடில்லை. இசைமொழியாய் தெலுங்கு திகழும் இழிவு ஒழிந்தபாடில்லை. பொருளற்ற கூச்சலே பாட்டாக-பொருளற்ற கிறுக்கலே புதுக்கவிதையாக விளங்கும் நிலைமைக்கு விடை கொடுத்தனுப்பும் விழிப்புணர்வு வியன் தமிழர்க்கு ஏற்படவில்லை

சாலையில் ஊர்தி ஓட்டுதற்கு விதிகள் உண்டு: இடது புறமென்ன எப்புறமும் செல்லுவேன் என்று ஊர்தி ஓட்டுவோன் நினைத்தால் எதிரே வருபவன் மீது மோதித்தானுக வேண்டும்.

நந்திவர்மன்

இலக்கண விதி தேவையில்லை எப்படி வேண்டுமானுலும் எழுதுவேன் என்போன் அத்தகு வண்டி ஓட்டியை போன்றவனே

யாப்பின்றி தளையின்றி சீரின்றி தமிழினக் காப்பின்றி கிறுக்கப் பெறும் உளறல்கள் புது முயற்சி யென்று போற்றப்படல் கூடாது.

ஆங்கிலத்தில் புதுக்கவிதை எழுதுவோர் (Iambic perta metre) என்று அதற்குரிய சீரோடு செய்யுள் இயற்றுகிருர்களே ஒழிய காட்டாற்று வெள்ளம்போல் மொழியின் அடிப்படையைத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பதை நாமுணர்ந்தாகல் வேண்டும்.

சிறுகதை யெனும் பெயரால் சிற்றின்ப வெறி தூண்டப் பெறுகிறதே ஒழிய சீரழிந்த இனத்தின் சிறப்பு மீட்கப் பெறுதற்கான செயல் ஊக்கம் ஊட்டப் பெறவில்லை.

நாவல்கள் எனும்பெயரால் நாட்டில் நற் கருத்து பரப்பப் பெருமல் நஞ்சு ஊட்டப் பெறுகிறது: கருத்தைப் பரப்ப அல்ல எழுத்து-காசு பறிக்கவே எழுத்து என்ருகியுள்ள நிலை நீங்கியாக வேண்டும் கருத்துப் புரட்சி ஓங்கியாக வேண்டும். தூங்கிக் கிடக்கும் தமிழரிடை இன உணர்ச்சி துலங்குதற்கேற்ற எழுத்துக்கள் தோன்றியாக வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகமாம் இன வெழுச்சிப் பேரியக்க இலட்சியங்கள் இளைய தலைமுறையினர் உள்ளத்தில் பதிக்கப்பட்டாக வேண்டும்.

பிறநாட்டுப் பெருவீரர் வரலாற்றைப் பேசி எழுதி பெருமை சொல்லி ஆண்ட இனத்தின் நீண்ட நெடும் புகழை மீண்டும் காண-மேன்மை எய்த புத்தெழுச்சி ஊட்டிய பணி தொய்வடைந்து நிற்கிறது.

கொள்கை இல்லாத இலக்கியம் கொள்கையைச் சொல்லாத இலக்கியம்-குறிக்கோள் இல்லாத வாழ்க்கை-தமிழ்க் குலத்தில் விளைதல் கூடாது. இலக்கிய நோக்கில் போக்கில் மட்டும்ல்ல-எதிலுமே மதளிவான குறிக்கோள் இல்லாமலே இந்நாடு தடுமாறிக் கொண்டிருக்கிறது.

"நம் அரசமைப்புச் சட்டம் கூட்டாட்சியுமன்று - ஒருமைத் தன்மை உடையது மன்று" என்று பிரதமர் பேசி இருக்கின்ருர். குழப்ப வாதமல்ல இது- குழம்பிய நிலையில் எழும் வாதம் இது நினைத்தவர்க்கு நினைத்த பொருள் தரவல்ல நிலையை நம் அரசமைப்புச் சட்டம் பெற்றுள்ளது என்பதற்கு பிரதமரின் பேச்சு தலையாய எடுத்துக் காட்டாகும்.

கூட்டாட்சி நாட்டில் நாம் குடி இருக்கிருேம் எனவே எவர்க்கும் நாம் கொத்தடிமை இல்லை-கூடி வாழ்வோம்-என்று நம்பி நாம் இருப்பதற்கு கூட்டாட்சி என்ற சொல்லைக் காட்டி-வைக்கோல் திணித்த கன்றுக் குட்டியைக் காட்டி ஆவின் பாலைக் கறப்பதுபோல் நம் மண்ணின் உரிமைகளைப் பறிக்க முடிகிறது.

ஒருமைத் தன்மை உடையது அரசமைப்புத் சட்டம் என இந்தி வெறியர் நம்பி-ஓர நாடு! ஒரே மொழிஎன்று இந்தியை திணிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வழி ஏற்படுகிறது.

பொருளியல் துறையிலாவது நாம் பொருத்தமான பாதையில் நடையிட்டுக் கொண்டிருக்கிருேமா என்ருல் இல்லை என்பதே பதிலாகும்.

முதலாளித்துவ சமூக அமைப்பினை முற்றும் கைவிட்டு விட்டோமா என்ருல் இல்லை என்கின்றனர் இந்தியப் பொருளியல் வல்லுநர்கள்.

சோஷலிசப் பாதையில் தான் நடையிடுகிருேமா என்ருல் அதற்கும் ஆமாம் என்பார்கள். வலதா? இடதா? இரண்டும்தான் என்றிடுவர்.

"முதலாளித்துவத்தின் உடம்புக்குள் உணவாகச் செல்லுகிற தொழிலாளர் வர்க்கம் தேவையான இரத்தத்தை அளித்துவிட்டுக் கழிவுப் பொருளாக வெளியேறுகிறது' என்று கலைஞர் அழகிய உவமையால் நாட்டு நிலையை சிறையில் பூத்த சின்னச் சின்ன மலர்கள்! எனும் நூலில் படம் பிடிக்கிருரே-அத்தகு நிலைக்கொரு முடிவு-தொழிலாளிதுயருக்கோர் விடிவு தேடும் வகையில் இந்திய நாட்டுப் பொருளாதாரம் திட்டமிடப்படவில்லை.

நடந்துகொண்டிருக்கிறேன்-உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்.

தூங்கிக்கொண்டிருக்கிறேன் - விழித்துக்கொண்டிருக்கிறேன்.

இடது பக்கம் செல்கிறேன் அதே சமயம் வலது புறம் போகிறேன்.

என்றெல்லாம் சொன்னுல் எப்படி ஏளனத்திற்குரியதோ அவ்வாறே முதலாளித்துவ நாடாகவும் ஒரே சமயத்தில் இந்தியா இருப்பதாகச் சொல்வதும் கேலிக்குரியது, கிண்டலுக்குரியது, கண்டனத்திற்குரியது.

உணவில் கலப்படமா? உடனே தண்டனை வேண்டும். என்போம்.பாலில்கலப்படமா? பழிப்போம் என்றிருக்கிருேம். ஆனுல் பொருளாதாரத்தில் கலப்பட பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருேம். மொழியில் கலப்படத்தைப் போற்றிக்கொண்டிருக்கிருேம் பண்பாட்டில் கலப்படத்தைப் பாராட்டிக் கொண்டு இருக்கிருேம்.

இந்த நிலையினின்று நாம் விடுபட இடையில் வரும் தடைகள் பொடிபட-சொந்த மண்ணில் சுயமரியாதையோடு நாம் நடையிட இனத் தலைவர் கலைஞர் காட்டும் இலட்சியப் பாதையில் தமிழினம் நடந்தாக வேண்டும் தடைக் கற்களைப் படிக்கட்டுக்களாக்கிக் கடந்தாகல் வேண்டும்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவரின் அந்தராத்மா ஓங்காரம் செய்கிறது!

படத்தில் அவர் காட்டிய மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் வித்தியாசம் தெரிகிறது!

அவர் நடித்த படங்களில் —அவரை எதிர்த்து

மின்சார ஊழியர்கள் இல்லை

மீன் பிடிப்போர் கிளர்ச்சி இல்லை

மாணவர் போராட்டம் இல்லை

ஆசிரியர் குமுறல் இல்லை

என்ஜினியர் "மொட்டை" இல்லை

என். ஜி. ஓ. கொந்தளிப்பு இல்லை

வைத்தியர் எதிர்ப்பு இல்லை

விவசாயிகள் ஆர்ப்பாட்டம் இல்லை

இவைகள் அவருக்குப் புதியவை! இந்தப் புதியவைகளைச் சந்திக்க அவருக்கு எந்தக் கதாசிரியனும் வசனம் எழுதிக் கொடுக்கவில்லை!

பாவம்! உரையாடல் எழுதித் தராத காரணத்தால் உளுத்துக் கொட்டுகின்ருர்!

படத்தில் அவர் பத்துப்பேரை அடிக்கும்போது ஏன் என்று கேட்க அங்கே காவல் நிலையம் இல்லை — கவர்னர் இல்லை — கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கச் சட்டமன்றம் இல்லை.

படத்தில் எதை வேண்டுமானுலும் செய்யலாம். ஆனுல் நாட்டில்......

வேடசந்தூர் துப்பாக்கிச் சூட்டிற்கு விளக்கம் கேட்க ஜனநாயகம் காத்துக் கிடக்கிறதே!

காரைக்குடி 'கற்பு' என்னவாயிற்று —கேட்பார்களே!

இதை எல்லாம் எண்ணிப் பார்த்து —நம் தலையில் யார் கூழைக் கரைத்து ஊற்றியது, இதைக் கவனிக்க என்று முடிவு கட்டி முந்தி இருந்த இடத்தை நோக்கிப் போய்விட்டார்!

பாமர மக்களின் பலவீனம்தான் அவரின் நடிப்பு —

பிரச்சினைகளின் பூதாகாரத் தோற்றம்தான் அவரின் ஓட்டம்!

அற்ப ஆசையால் விளைந்த பிரசவந்தான் அவரின் "முதலமைச்சர்" தோற்றம்!

பாவம் அவர் நடிக்கட்டும்!

'செத்துப் போன' சட்டமன்றம் உயிர் பெறட்டும்!

ஓட்டளித்த ஊமைகளே - வழி விடுங்கள்!

இரா. வெற்றி கொண்டான்

இந்தியத் துணைக்கண்டத்தில் —

தமிழ்நாடு
பாண்டிச்சேரி
அப்பப்பா...

இந்த இரண்டு மாநிலங்கட்கும் இன்று இருக்கும் சிறப்பு, ஏட்டில் எழுத முடியாதே!

கல்வெட்டில் அல்லவா பொறிக்க வேண்டும்!

காலத்தின் கோளாறு நாடு ஒரு காலக் கட்டம்வரையில் இந்தக் கொடுமைகளைத் தாங்கித்தான் தீரவேண்டும்.

என்ற கலைஞரின் எழுத்தோவியத்திற்குப் பொன்னாடையல்லவா போர்த்த வேண்டும்!

தமிழ் நாடு.—பாண்டிச்சேரி! ஒன்று ஆயுள் இல்லாத மந்திரி சபை'

மற்றொன்று அறிவில்லாத மந்திரி சபை.

இல்லையெனில்,

ஏப்ரல் இறுதி நாட்களில் ஆளும் கட்சியினர் கூடி, நாடெங்கும், ஒருவார காலம், வன்முறை கண்டனக் கூட்டங்கள் நடத்த வேண்டும் எனத் தீர்மானம் போடுவார்களா?

"கடவுளென்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி"

அந்தக் கடவுளின் தொழிலாளிகளான. "எட்டு" விவசாயக் குடும்பங்களின்-மாங்கல்யமும்-மஞ்சள்-குங்குமமும்-பறிக்கப்பட்டு-எட்டு விவசாயிகளின் சவ ஊர்வலத்தில்-வன்முறை என்று-கண்டன முழக்கம் எழுப்பும் கோமாளிகளை-

யாரேனும் பார்த்ததுண்டா?
எவரேனும் கேட்டதுண்டா?

முதல்வரே'-விவசாயியே'! உங்கள் குழுக் கூட்டத்தில் வன்முறை கண்டனக் கூட்டத் தீர்மானம் நிறைவேற்றிய ஒன்று போதுமே,

'சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது,என்பதற்கு ஒப்புதல் வாக்கு மூலம் தந்து விட்டீர்கள்!"

ஓர் அரசு விளைவுகள் உருவாகாமல் தடுக்க வேண்டும்! அல்லது,

இயலவில்லை என்றால்-ஏற்பட்ட, விளைவுகட்குப் பொறுப்பேற்றுக் கொண்டு மரியாதை"ாகப் பரிகாரம் காண வேண்டும்!

இரண்டுக்கும் தகுதியில்லை என்றால்-இடத்தைக் காலி செய்து விட்டு நகர வேண்டும்!

வன்முறைகளை

திராவிட முன்னேற்றக் கழகம் உதாசீனம் செய்கிறது!

நிராகரிக்கிறது!
கண்டிக்கிறது!

ஆனால்,
இன்றுவன்முறையென்று — வயிற்றைப் பிசையும் —

முதலமைச்சர் பொறுப்பில் இருப்பவரே!

இந்த வன்முறையை விலை கொடுத்துவாங்கி, வியாபாரம் செய்த, பெரிய மனிதன் போர்வையிலிருக்கிற—சில

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து—நடிகர் இராமச் சந்திரனை அப்புறப் படுத்திய போது.

உடைக்கப்பட்ட கார்கள் எத்தனை?

கொளுத்தப்பட்ட பஸ்கள் எத்தனை?

அன்று நடைபெறாத 'வன்முறையா?"

பன்னிரண்டு மணி நேரம் இரயிலை நிறுத்தி, வித்தை காட்டிய—தெரு ஓரத்துப் பெரிய மனிதர்கள் யார்?

அவை யெல்லாம் பொதுச் சொத்துக்கள் இல்லையா?

அன்று-கண்டித்ததுண்டா? வருத்தம் தெரிவித்ததுண்டா?

மக்களின் மகோன்னதப் போராட்டம் என்றல்லவா வர்ணித்தீர்!"

இன்று நீலிக் கண்ணீர் வடித்தால் யார் துடைப்பது?

அன்று வால் போஸ்டர் அடித்து "சுகுமாரன்' "சுகுமாரன்' என்று அலறிய சுக்கிராச்சாரியே!

இன்று எட்டுப் பிணங்களின் மீது தாலியை அறுத்துப் போட்டு விட்டு—அலறித் துடிக்கும், தாய்மார்கட்கு ஆறுதல் சொல்ல அரை மணி நேரம் ஒதுக்கியதுண்டா?

எட்டு விவசாயிகளின் எலும்புக் கூட்டின்மீது அடக்குமுறை யென்னும் கொடியினைக் கட்டிப் பறக்கவிட்ட,

கொங்கணவா.?

வன்முறை கண்டனக் கூட்டம் நடத்த வெட்கமில்லையா?

இவைகளைக் கேட்டால்,...

திராவிட முன்னேற்றக் கழகம் தான் தூண்டிவிட்டதென்று

யார் செத்தாலும் ஒரே ஒப்பாரி வைப்போரைப்போல் நீரும் ஓலமிடுகிறீரே!

'திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த வீட்டு நெருப்பிலே குளிர் காய்கிற கோழை அல்ல"

என்பதை எத்தனை முறை எடுத்துச் சொல்வது?

திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டியிருந்தால்,

தஞ்சைத் தரணி ததும்பியிருக்காதா?

நெல்லைச் சீமை தான் நடுங்கியிருக்காதா?

நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் அரசு நடத்திக் காட்டிய அடக்குமுறைக் கொடுமையை விவரித்து, கண்டித்து அனைத்துக் கட்சிகளும் அறிக்கை தந்தனவே!

அதற்கு இதுவரை உம் பதிலென்ன?

எந்தக் கட்சியாவது, திராவிட முன்னேற்றக் கழகம் தான்—தூண்டியது என்று,

தன் வீட்டு அகட்பைபாலே உங்கள் வீட்டுச் சோற்றைப் போட்டுச் சாப்பிடும் எவரேனும் சொன்னதுண்டா?

கோவை, சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு, போன்ற மாவட்டங்களில். சில, சில பகுதிகளில் மட்டும், நடைபெற்ற இந்தப்போராட்டத்திற்குத் தீர்வுகாண இயலாமல் இந்தியாவிலேயே புகழ் பெற்ற—தமிழ் நாடு காவல் துறையைக் கேவலப்படுத்தி விட்டு,

இராணுவத்தை அழைத்த போதே உங்கட்கு ஆளத்தகுதியில்லை என்று நீங்களே நிரூபித்த பின்னல், ஆட்சிப் பொறுப்பிலிருக்க உங்களுக்கு அவமானமாக இல்லையா?

வன்முறை யென்று சொல்லி திசை திருப்பக் கிளம்பியிருக்கும் புத்தபிரான்களே!

விவசாயிகளின் உடைமைகளைக்கொடுமையிலும் கொடுமையாக நாசப்படுத்திய உங்களின் ரசிக சிகாமணிகளை என்றைக்குக் கண்டிக்கப் போகிறீர்கள்?

வக்கற்ற துரைத்தனமே' வன்முறையிலே ஈடுபட்டது. யார்—என்பதற்கு, அதிகார பூர்வமான ஆதாரம் இதோ நாம் தரவில்லை' முகவை மாவட்டக் கலெக்டர் சுப்பிரமணியமே தருகிறார்!

[இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகேயுள்ள "பூலாங்குளம்" என்னும் ஊரில், பதினாறு—விவசாயிகளின் கிணறுகளிலிருந்த பம்பு செட்டுகளை உடைத்து நாசம் செய்ததாக இன்ஸ்பெக்டர்—உள்பட. சில போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாயும். அவர்களில் சிலர் மீது வழக்கொன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாயும், ஜில்லா கலெக்டர் திரு. எஸ். சுப்பிரமணியம் நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

30—4—78 தினமணி]

ஐயா! புரட்சித் தலைவரே! புனித ஏசுவே!

போலீஸ் அமைச்சர் நீங்கள் தானே?

வன்முறையில் ஈடுபட்டது யார் என்பதற்கு இதற்கு மேலும் சாட்சி தேவையா?

இலர்களைத் தூண்டிவிட்டது யார்?

இந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கும் புனிதத் தலைவராகிய நீங்கள்தானா?

இந்த வன்முறையைக் கண்டித்து—என்றைக்குத் தீர்மானம் போட்டு—கூட்டம் நடத்தப் போகிறீர்கள்?

காலச் சக்கரம் சுழலட்டும்!

உங்களை நம்பி வாக்களித்த ஊமைகளின் விழிகள் ஊற்று நீராகப் பெருக்கெடுக்கட்டும்!

நான்கு திசைகள் உண்டல்லவா!

அதோ.. உம் ஆட்சியில் புயலாலும், வெள்ளத்தாலும் வீழ்ந்த பிணங்களின்—சவ ஊர்வலம் கிழக்குத் திசையிலே, செல்லட்டும்!

மீனவ நண்பரே! உமது துரைத்தனத்தால், துளைக்கப்பட்ட. குண்டுகளைத் தாங்கிக் கொண்ட மீனவரின் பிண ஊர்வலம் மேற்கு திசையிலே பயணமாகட்டும்!

கறுப்புக்கொடிப் போராட்டத்திலே கண்மண் தெரியாமல் சுட்டு வீழ்த்தினீரே, அந்தத் தமிழ்ப் பிணங்கள் வடக்குத் திசையை வழியாகக் கொள்ளட்டும்!

வாழ்வு கேட்டுப் போராடிய உன் இதயத்தின் எதிரே இரு கையேந்திய, எட்டு விவசாயிகளின் சவ ஊர்வலம்.

தெற்கு நோக்கித் திரும்பாமல் செல்லட்டும்!

புரட்சித் தலைவா!

தமிழ்க் குளத்தில் நீந்துகின்ற மனித மீன்களைத் தூக்கித் தூக்கி வெளியே போடு

துடிக்கும் கொஞ்ச நேரம்.

பின் உணவாக்கிக் கொள் உன் பசிக்கு!

ஏ...... ஓட்டளித்த ஊமைகளே

ஊர்துவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டு வரும் சவ ஊர்வலத்திற்கு வழி விடுங்கள்!

இந்திய இரயில்வே· ஒரு கணக்கு!

இந்தியாவின் பதினேராயிரம் புகை வண்டிகள் ஒவ்வொரு நாளும் 90 லட்சம் மக்களையும், ஆறு இலட்சத்து 65 ஆயிரம் டன் சரக்குகளையும் ஏற்றிச் செல்கின்றன; நாடு முழுக்க 60 666 வழித்தட கிலோ மீட்டர்களைக் கடந்து செல்லும் இப்புகை வண்டிகள் 7056 புகை வண்டி நிலையங்களைச் சந்திக்கின்றன! அதாவது —

நாளொன்றுக்கு பதின் மூன்று இலட்சம் கிலோ மீட்டர்கள் ஓடுகின்றன; நாட்டு மக்களில் பாதிப் பகுதியினர் புகை வண்டிகளில் பயணம் செய்கின்றனர்; மொத்த சரக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு புகை வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இந்தியரயில்வேக்கள் ஆசியாவிலேயே மிகப் பெரியன; உலகத்தின் நான்காவது பெரிய அமைப்பும் இதுவே! இதன் மொத்த மதிப்பு ரூ. 5572 கோடியாகும்; ஆண்டொன்றுக்கு ரூ. 2100 கோடிக்கு மேல் இத்துறையால் வருமானமாகக் கிடைக்கிறது. பதினேழு இலட்சம் பேருக்கு மேல் இத்துறையில் பணியாற்றுகின்றனர்.

இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதது!
குடும்ப நலத் திட்டம்!
உங்கள் இல்லத்திற்கு இன்றியமையாதது
எங்களது சுலபத் தவணைத் திட்டம்
எம். கே. டிரேடர்ஸ்
H.O. 41. ரங்கராஜபுரம் ரோடு, சென்னை
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தேக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்.
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72 C. டவுன்ஹால்ரோடு, மதுரை.

சென்னை மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் சீரும் சிறப்புமாக நடைபெற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழாவில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றிடும் காட்சி.

தொழிலாளர்களுக்கு என்றும் துணைநிற்கும் தி. மு. கழகம்!

தந்தை பெரியார் அவர்கள் சோவியத் நாட்டிற்குச் சுற்றுலா சென்றுவிட்டு தாயகம் திரும்பிய பிறகு, அங்கு மணக்கின்ற சமதர்மத்தை தமிழ்நாட்டு மக்களுக்கும் எடுத்துச் சொல் லின்ற வாய்ப்பினைப் பெற்றார்கள். சமத்துவம், சமதர்மம் இவைகள், தமிழ்நாட்டிலே எல்லோருடைய உள்ளத்திலும் பதிந்திடவேண்டிய பொன்னான கருத்துக்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். அந்தக் கருத்துக்கள் தழைப்பதற்கு சுயமரி யாதை இயக்கத்தை, திராவிடர் இயக்கத்தை வளர்த்தார் கள். அந்த வளர்ச்சியினுடைய ஒரு கட்டமாகத்தான் விரி வான கட்டமாகத்தான், அரசியல் ரீதியாக வளர்ந்த கட்ட மாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு இயங்குகிறது.

இந்தியாவிலே மே தினத்திற்காக விடுமுறை விடப்பட்டுள்ள ஒரு சில மாநிலங்களில் நம்முடைய தமிழ்நாடும் ஒன்று என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். அப் படிப்பட்ட மே நாளை நாம் கொண்டாடுகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில் தொழி லாளர்களுடைய பிரச்சினைகள் எவ்வாறெல்லாம் அணுகப் பட்டது என்பதை நினைவுகூர்வது நலம் என்றே நான் கருது கின்றேன்.

கழகம் அரசுப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் தொழிலாளர் நலனை நாடியது என்று யாரும் தவறாகக் கருதத் தேவை யில்லை. எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், இன்னும் சொல்லப் போனால் வலிவான எதிர்க்கட்சியாக ஆகாத அந்தக் காலத்திலேகூட, தமிழகத்தில் தொழிலாளர்களுடைய நியாயமான வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், போராட்டங் கள் எங்கே நடைபெற்றாலும், அங்கெல்லாம் திராவிட இயக் கத்தாருடைய ஒத்துழைப்பும் உறுதுணையும் இருந்தது என் பதை வரலாற்றுக் குறிப்புக்கள் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றன.

அண்ணா அவர்கள், தொழிற்சங்க இயக்கத்தை ஒரு அமைப்பு ரீதியாக நடத்துவதற்கான பக்குவம், அல்லது வளர்ச்சி நம் முடையகழகம் பெறவில்லை என்பதற்காகக்காத்திருந்தார்கள். அதைப் பெறுகிற வகையில் நாட்டிலே உள்ள மற்ற தொழிற் சங்கங்களுக்கு எத்தகைய இடையூறுகளும் விளைவிக்காத வண்ணம், அவைகளோடு ஒத்துழைப்புத் தருகின்ற வகையில் நடந்தும் காட்டினார்கள். இன்றைக்கு நமக்கென்று தொழிற் சங்க அமைப்புகள் ஏராளமாக எண்ணற்ற வகையில் நாட் டிலே உருவாகியிருக்கின்றன என்றாலும் இப்பொ ழுதும் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்— என் சார்பில் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் பேராசிரி யருடைய சார்பில் நான் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களுக் கெல்லாம் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் வலிவாக இருக்கின்ற எந்த ஒரு நிறுவனத்திலும், நீங்கள் தொடங்கு கின்ற எந்த நியாயமான போராட்டமாக இருந்தாலும்; அங்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுக்குப் பக்க பலமாக வந்து நிற்கும் என்கிற உறுதியை நான் அவர் களுக்கெல்லாம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்: ஏனென் றால் நாம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே அத் தகைய நிலையை எடுத்தவர்கள். ஆளும் கட்சியாக இருந்த நேரத்திலும் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் புரிந்துகொண்டு அவர்களுடைய நலனை நாம் நெஞ்சிலே பதிய வைத்துக்கொண்டு உரியவைகளை உரிய நேரத்தில் வழங்கியவர்கள், அப்படிப்பட்ட பரம்பரையிலே நாம் வந்த வர்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தொழிலாளர்களைப் பற்றிப் பாடிய கவிதைகள் சிலவற்றை பேராசிரியர் நினைவுப் படுத்தினார். நம்முடைய மன்னை அவர்கள் இங்கே ஞாபகப் படுத்தினார்.

“காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் — அவன்
காணத்தகுந்தது வறுமையா?
பூணத் தகுந்தது பொறுமையா?

—என்று பாரதிதாசன் அன்று கேட்ட கேள்வி ஏதோ பத்தாண் டுக்கு முன்பு கேட்ட கேள்வியல்ல. திராவிட இயக்கத்தின் சார்பாக முப்பது அல்லது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே கேட்ட கேள்வியாகும். சிங்காரவேலர் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தளநாயகர்களிலே ஒருவர் என்றாலும் பெரி யாருடைய பகுத்தறிவு இயக்கத்தோடு சார்ந்து நின்று பெரி யாருடைய பகுத்தறிவுக் கொள்கைகளை நாட்டிலே பரப்பி யவர். அப்படிப்பட்ட சமதர்மவாதிகளையெல்லாம் தன்னோடு இணைந்துக் கொண்டு ஜீவானந்தம் போன்ற தொழிற்சங்கத் தானைத் தலைவர்களையெல்லாம் தன்னோடு இணைத்துக் கொண்டு இயக்கம் நடத்தியவர்தான் நம்மையெல்லாம் உரு வாக்கிய தந்தை பெரியார் ராமசாமி ஆவார்கள். அப்படிப் பட்டவர்களுடைய தலைமையிலே வளர்ந்தவர்கள் நாம் தொழிற்சங்க இயக்கங்களை திண்டாட விட்டு விட்டோ— தவிக்க விட்டுவிட்டோ, தொழிலாளர்களுக்கு நேர்ந்த —நேரு கிற சங்கடங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டோ என் றைக்கும் இருக்க மாட்டோம்; ஆளுகிற கட்சியிலே இருந்தா லும் சரி எதிர்க் கட்சியிலே இருந்தாலும் சரி என்பதை இந்த மே திருநாளில் நான் உறுதியாகக் கூறக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

-கலைஞர்

(மேநாள் விழாப் பேருரை)

உணவு விடுதிகளில் நச்சுப் பதார்த்தங்கள்!

பிரிட்டிஷ் உணவு விடுதி களில் பரிமாறப்படும் உண வுப் பதார்த்தங்கள் நஞ்சாகி விடுவதால் ஏற்படும் உயிரி ழப்புகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கூடிக் கொண்டே போகிறது; இத னால் உணவு நஞ்சாவதைத் தடுக்க கடுமையான சட்டம் இயற்ற வேண்டும்’ என்று அரசாங்கத்திடம் பலரும் கோரிக்கை எழுப்பி வருகிறார் கள். உணவு விடுதிகளுக் குச் சென்று உல்லாசமாக உணவருந்தி வரலாம் என நினைப்பவர்கள், உயிரிழப்புக்கு ஆளாவது கண்டு பிரிட்டிஷ் அரசும் ஆழ்ந்த கவலை அடைந்து வருகிறது.

நச்சுணவால் பாதிக்கப் பட்டவர்களில் பலர் மருத் துவ விடுதிக்குச் செல்லாது வீட்டிலேயே மருத்துவம் செய்துகொள்வதால் பாதிக் கப்பட்டவர்களின் உண்மை யான மொத்த எண்ணிக்கை தெரிவதில்லை என ஒரு பத்தி ரிகை கூறுகிறது.

★

முதலாளித்துவ நாடுகளில்வேலையில்லா திண்டாட்டம்

செல்வத்தில் மிதக்கும் முதலாளித்துவ நாடுகளிலும் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பயங்கரமான நோய் நாளுக்கு நாள் வளர்ந்து வரு கிறது.

இத்தாலியில் 1,200,000 இளைஞர்கள் வேலையின்றி அவதிப்படுகிறார்கள்; மேற்கு ஜெர்மனியில் ‘வேலை வெட்டி’ இல்லாதோரின் எண்ணிக்கை 40 000 பிரான்சிலோ வேலை யற்றோரின் எண்ணிக்கை கடந்த ஆறாண்டு காலத்தில் பத்து மடங்கு உயர்ந்துள்ளது நியூயார்க்கில் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு வேலை இல்லை! — ஆனால் இந்நாடுகள் இராணு வத்திற்காக செலவிடப்படும் தொகைகளிலோ குறைச்ச லொன்றும் கிடையாது.

அமைதி இழந்து வரும் அமெரிக்க மாணவர்கள்

அமெரிக்க மாணவர்கள் அமைதி இழந்து வருவதை அவர்களுடைய அத்துமீறல் களும் ஒழுங்கீனமான நடவ டிக்கைகளும் கட்டுப்பாடற்ற தம்மிச்சையான போக்குகளும் மெய்ப்பித்து வருகின்றன!

எடுத்துக்காட்டாக — டெட்ராயிட் நகர உயர் நிலைப் பள்ளியில் பயிலும் நாற் பதாயிரம் மாணவர்களைக் கட்டுப்படுத்தி வழிக்குக் கொண்டு வருவதென்பது இயலாத காரியமாக உள்ள தாம்.

பள்ளி விதிகளை மீறுவ தோடு அம் மாணவர்கள் நிற்கவில்லை, ஆட்களை அதட்டி மிரட்டி— அடித்து— உதைத்து— வழிப்பறிகள் நடத்தவும் துணிந்துவிட்டார் கள்.

மாணவர்களிடையே சட் டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசாங்கம் பள்ளிகளில் காவ லர்களை வைத்திருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்: ‘அன்பகம்’ 1/104-B, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. தொலைபேசி 441009.